திருக்கோயிலும்

திருத்தமும்

★

ரா. பி. சேதுப்பிள்ளை
மு. வரதராசன்
ம. பொ. சிவஞானம்
மா. இராசமாணிக்கம்
அ. கி. பரந்தாமனர்
ரா. நடேச நாயகர்
பண்டித வி. நடேசன்

(ஆகியோரின் கருத்தோவியங்கள்.)

★

வெளியிடுவோர் :

இளைஞர் நல்லற மன்றம்

107, கந்தசாமி கோயில் தெரு

சென்னை 12

முதற்பதிப்பு] 1949 [விலை

பதிப்புரை

தமிழ்நாட்டுக் கோயில்களும், அறநிலையங்களும் காலத்துக் கேற்ற வகையில் திருந்தாது போனமையுடன், கள்ளர் குகைகளாகவும், விபசார விடுதிகளாகவும், வாணிகச் சந்தைகளாகவும், மடமையை வளர்க்கும் மடங்களாகவும் மாறிவருகின்றன. இந்நிலைதான் நாட்டிலே நாத்திகம் பரவ காரணமாயிற்று எனத் துணிந்து கூறலாம்.

இக்கோயில்களும் அறநிலையங்களும் வெறுங் கற்சிலைகளாகவும், கலைச் சின்னங்களாகவும் காட்சியளித்தல் கூடாது. கலை வளர்க்கும் கூடங்களாகவும், மக்கள் நிலை உயரப் பாடுபடும் நிலையங்களாகவும், மொழிப் பற்றும் சமய உணர்ச்சியும், உலகியலறிவும் கொண்ட மக்களை மலரச்செய்யும் மன்றங்களாகவும் திருந்த வேண்டும் என்ற எமது எண்ணம்தான் 'கோயில் சீர்திருத்த மாநாடாக' உருவெடுத்தது.

இம்மாநாட்டின் நினைவாகத் 'திருக்கோயிலும் திருத்தமும்' என்ற இம்மலரை வெளிக் கொணருகின்றோம்.

எங்களது இம்முயற்சி முதன் முயற்சி என்றாலும், காலத்தால் மேற்கொண்ட முயற்சியாகலின் வாசகர்கள் பிழைகாணின் பொறுத்தருள வேண்டுகின்றோம்.

மலருக்கு எமது வேண்டுகோட்கிணங்கி எவ்விதத் தடையுமின்றி அரிய கருத்துரைகளைத் தந்துதவிய தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சுகந்த நன்றியையும் வாழ்த்தினையும் உரிமையாக்குகின்றோம்.

இம்மலர் காலத்தில் வெளிவர மற்றும் பல்லாற்றானும் உதவிபுரிந்த ஏனைய அன்பர்கட்கும் எமது நன்றி உரியதாகும்.

இளைஞர் நல்லற மன்றம்

தமிழர் பண்பாடும் பரம்பொருளும்

ரா. பி. சேதுப்பிள்ளை B.A. B.L.

தமிழ்நாடு என்றும் தெய்வ மணம் கமழும் திருநாடு. 'ஒன்றென்றிரு; தெய்வம் உண்டென்றிரு' என்று நன்றாக அறிவுறுத்திய நாடு தமிழ்நாடு. அங்கு இங்கு எனாதபடி எங்கும் உள்ளது தெய்வம்; அன்று இன்று எனாதபடி என்றும் உள்ளது தெய்வம்; அதன் ஆணையின்றி ஓர் அணுவும் அசையாது என்பது தமிழ் நாட்டு ஆன்றோர் கொள்கை.

செந்தமிழ் மொழியில் எழுந்த சிறந்த கவிதைகளும் காவியங்களும் இந்த உண்மையை நன்கு விளக்குகின்றன. தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்று உலகம் போற்றும் மெய்ஞ்ஞானச் செல்வர் தமது அருமைத் திருக்குறளிலே 'அகரம் முதல எழுத் தெல்லாம் ஆதி - பகவன் முதற்றே உலகு' என்று ஐயந்திரிபற அறிவுறுத்தினர். ஐம்பெருங் காவியங்களுள் தலைமை சான்ற சிலப்பதிகாரம், 'தெய்வம் தெளிமின்; தெளிந்தார்ப் பேணுமின்' என்று கட்டுரை கூறுகின்றது.

தெய்வம் உண்டு என்று தெளிந்து தெய்வ நெறியிலே நின்றவர்களைச் சைவ சமயம், நாயன்மார்கள் என்று சிறப்பித்துக் கூறும்; வைணவசமயம் ஆழ்வார்கள் என்று போற்றிப் புகழும். சைவம், வைணவம் என்னும் இரு நெறிகளும் தமிழ் நாட்டில் மிகப் பழமையான சமயங்கள். சிவன் என்ற பெயரால் இறைவனை வழிபடும் சமயமே சைவம். சிவம் என்னும் சொல் மங்கலம்

அல்லது நன்மை என்ற பொருளைத்தரும். எனவே நன்னெறி என்றாலும் சிவநெறி என்றாலும் பொருள் ஒன்றே. இதனாலன்றோ 'நன்னெறியாவது நமச்சிவாயவே' என்று தேவாரம் பாடிற்று!

தமிழ்ப் பெருங்காவியங்கள் எல்லாம் சிவபிரானது பெருமையைப் பேசுகின்றன. 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று சிலப்பதிகாரம் சிவபெருமானைப் போற்றுகின்றது. 'போகம் ஈன்ற புண்ணியன்' என்று சிந்தாமணி அப்பெருமானைப் புகழ்கின்றது. 'நுதல் விழி நாட்டத்து இறையோன்' என்று மணிமேகலை வாழ்த்துகின்றது. அழிவற்ற மெய்ப் பொருளாகிய அப்பெருமானை 'ஈறிலான்' என்று கம்பர் ஏத்துகின்றார். எனவே பிறப்பு இறப்பு அற்றவன் சிவன்; இன்பந்தரும் இறைவன் சிவன் என்ற கருத்து தமிழ்ப் பெருங் காப்பியங்களாற் பெறப்படுகின்றது.

இனி வைணவ சமயத்தைக் குறித்துத் தமிழ்க் காவியங்கள் கூறும் செய்திகளைக் காண்போம். விஷ்ணுவை வழிபடும் நெறி வைணவம் என வழங்குகின்றது. விஷ்ணு என்ற வட சொல்லுக்கு வியாபித்திருப்பவன் என்று பொருள் கூறுவர். இறைவன் என்ற தமிழ்ச் சொல்லுக்கும் அதுவே பொருள் என்பர் அடியார்க்கு நல்லார். எப்பொருளிலும் தங்குகின்றவனே இறைவன் என்பது அவர் கருத்து. அப்பெருமானுடைய வண்ணமும் வடிவமும் சிலப்பதிகாரத்திலே அழகாக எழுதிக் காட்டப்படுகின்றன. நீலமேனி நெடியோன் என்று சிலப்பதிகார ஆசிரியர் நிறைந்த மொழிகளால் திருமாலைப் புகழ்ந்து போற்றினார். அருமையான அக்கருமையைக் காணாத கண் ஒரு கண் ஆகுமா?

'கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்கள் கண் என்ன கண்ணே'

என்று சிலப்பதிகாரம் பாடுகின்றது. திருவேங்கடம் என்னும் திருப்பதி மலையிலும், திருவரங்கம் என்னும் ஆற்றிடைக்குறையிலும் கோயில் கொண்டுள்ள திருமாலின் கோலத்தை இணையற்ற சொல்லோவியமாக எழுதிக் காட்டுகின்றது சிலப்பதிகாரம்.

'வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
பகை யணங்காழியும் பால் வெண் சங்கமும்
தகை பெறு தாமரைக் கையின் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்'

என்று சிலப்பதிகாரத்திலே படிக்கும்பொழுது திருமாலின் நின்ற திருக்கோலம் நம் மனக் கண்ணெதிரே மிளிர்கின்ற தன்றோ? திருவேங்கடமலையில் இக்காட்சியைக் கண்ட தமிழ் மக்கள், நெடியோன் குன்றம் என்றும், மாலவன் குன்றம் என்றும் அம்மலைக்குப் பெயரிட்டார்கள். தமிழகத்தின் எல்லை கூறப்போந்த பாரதியார்,

'நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவஞ் செயும் குமரி எல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு'

என்று பாடும்பொழுது சிலப்பதிகாரச் சித்திரம் நம் சிந்தையில் எழுகின்றதன்றோ?

செந்தமிழ்க் காவியங்களிலே விளக்கப்படுகின்ற இறைவன் தன்மையை உணரும்பொழுது நமது உள்ளம் இறைவன்பால் ஈடுபடுகின்றது. 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' என்ற திருக்குறளின் கருத்து உள்ளத்தை உந்துகின்றது. இறைவனது திருவருளைப் பெறுதற்குரிய வழிகளை நாடுகின்றது. அத்தகைய வழிகளில் சாலச்சிறந்தது சரணகதி. இறைவனுடைய திருவடியே தஞ்சம் என்று அடையும் நிலைதான் சரணகதி - எனப்படும். மனக்கவலையை மாற்றும் மருந்து அதுவே என்று திருவள்ளுவர் முதலாய மெய்யறிஞர் எல்லாம் கூறுவர். 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது' என்பது திருக்குறள். தனக்கு உவமையில்லாத தலைவனிடம் உடல் பொருள் ஆவி யென்னும் மூன்றையும் ஒப்புவித்து மனக்கவலை மாற்றிய மேலோர் இந்நாட்டில் பலராவர்.

அவர்களுள் ஒருவர் மாணிக்கவாசகர். ஆண்டவனிடம் தம்மை அடைக்கலமாக ஒப்புவித்த அப்பெருமான் கவலையற்றுப் பாடும் கவிதையைப் பாருங்கள்.

‘அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே’

என்று பாடினார் மனக்கவலையற்ற மாணிக்கவாசகர்.

கம்பராமாயணம் சரணாகதி என்னும் அடைக்கலத்தின் பெருமையை அழகுற எடுத்துரைக்கின்றது. எல்லாம்வல்ல இறைவன் ஏழை பங்காளன். அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்பவன். அவனைச் சரணமடைதலே சிற்றுயிர்க்குச் சிறந்த நெறியாகும் என்ற உண்மையைக் காவியத்தின் முதற் பாட்டிலே காட்டுகின்றார் கம்பர்.

‘உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே’

என்பது கம்பராமாயணத்தில் உள்ள கடவுள் வாழ்த்து. இறைவனே எல்லா உலகையும் படைப்பவன்; காப்பவன்; அழிப்பவன். இத்தகைய முத்தொழில் செய்பவனே முதல்வன். அவனே ஆண்டவன். நாமெல்லாம் அவன் அடைக்கலம் என்ற கருத்தை நன்றாக அறிவித்தார் கம்பர்.

தெய்வத்தின் பேரால் நிகழ்த்தப்படும் ஏசலும் பூசலும் தீமையே பயக்கும் என்பது கம்பர் கொள்கை. முத்திநெறி யறியாத மூர்க்கரே அவ்வாறு செய்வர். ‘அரன் அதிகன், உலகளந்த அரி அதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்குப் பரகதி சென்றடைவரிது’ என்பது கவியரசர் வாக்கு. பாமர மக்களும் இவ்

வுண்மையை அறிந்து கொள்ளும் வகையில் ஒரு பழமொழி இந்நாட்டிலே வழங்குகின்றது. அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதார் வாயிலே மண்ணு என்ற வாசகம் சிறிது கடுமையாக இருப்பினும் நல்ல கருத்துடையதென்பதை மறுக்க முடியுமோ?

இனி கிறிஸ்து மதச் சார்பாக எழுந்த காவியங்களில் ஒன்றைப் பார்ப்போம். தேம்பாவணி என்னும் காவியம் இத்தாலிய தேசத்திலே பிறந்து தமிழ் நாட்டில் சமயத் தொண்டு செய்ய வந்த பெஸ்கி என்னும் வீரமாமுனிவரால் இயற்றப்பட்டதாகும். யேசுநாதரைத் தாதையாக வளர்த்த சூசையப்பரது சரிதத்தை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாட்டுக்களில் ஒரு பெருங் காவியமாகப் பாடினர் அம்முனிவர். அக்காவியத்தின் தொடக்கத்தில் அமைந்தக் கடவுள் வணக்கச் செய்யுளைப் பாருங்கள்.

'சீரிய உலகம் மூன்றும் செய்து
அளித்து அழிப்ப வல்லாய்
நேரிய எதிர் ஒப்பின்றி
நீத்த ஓர் கடவுள் தூய
வேரிய கமல பாதம்
வினையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன்தன் காதை
அறம் முதல் விளங்கச் சொல்வாம்'

என்பது தேம்பாவணிப் பாட்டு. இக்கவியின் நோக்கும் போக்கும் கம்பராமாயணக் கடவுள் வாழ்த்துச் செய்யுளை ஒத்திருக்கக் காணலாம். பரலோகம், பாதாளம், பூலோகம் என்னும் மூவகைப்பட்ட உலகங்களையும் படைத்து, காத்து அழிக்க வல்லவன் இறைவன்; அவன் ஒப்புயர்வற்றவன். அப்பெருமானுடைய திருவடிகளைப் போற்றிக் காவியம் செய்யலுற்றேன் என்று கூறுகின்றார் கவிஞர்.

முன்னாளில் சமணமும் சாக்கியமும் தமிழ் நாட்டிற் பரவியிருந்தன. இந்நாளில் கிஸ்றிதவ மதமும் முகமதிய மதமும் பரவி

வருகின்றன. எந்நாளும் சைவமும் வைணவமும் இந்நாட்டில் உண்டு. மதங்கள் பலவாயிருந்தாலும் மதவெறி அதிகமாக இருந்த தில்லை. தமிழகத்தின் பண்பாடு சமயவெறிக்கு இடந்தரவில்லை. ஒரு குடும்பத்திலேயே ஒருவர் சைவராகவும், மற்றொருவர் சமண ராகவும் இருந்திருக்கின்றார்கள். சேரநாட்டை யாண்ட தமிழ் மன்னன் குடியில் செங்குட்டுவன் சிறந்த சைவன்; அவன் தம்பி யாகிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்த துறவி. இவர்கள் இருவரும் மதவேற்றுமையால் மனவேற்றுமையின்றி வாழ்ந்ததற்குச் சிலப்பதிகாரமே சான்று.

மணிமேகலை என்னும் காவியத்தில் அந்நாளிருந்த வித்தியா மண்டபம் குறிக்கப்படுகின்றது. பட்டி மண்டபம் என்பது அதன் பெயர். சமயவாதிகளும் கலைவாணரும் பட்டி மண்டபம் ஏறிப் பேசும் வழக்கம் இருந்ததாகத் தெரிகின்றது. 'ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்; பட்டி மண்டபத்துப் பாங்கறிந்தேறுமின்' என்று மணிமேகலை கூறுகின்றது. இத்தகைய பட்டி மண்டபங் களில் நிகழும் அறிவுரையைக் கேட்டு, அவரவர் அறிவிற் கேற்ற சமய நெறியை மேற்கொண்டு தமிழ் மக்கள் அமைதியாக வாழ்ந்தார்கள். மணிமேகலை என்ற மங்கையின் வரலாறே அதற் கோர் எடுத்துக்காட்டாகும். பல சமயவாதிகளின் கொள்கை களையும் மணிமேகலை நன்றாகக் கேட்டுப் பௌத்த சமயத்தைச் சேர்ந்தாள் என்று அவ்வரலாறு கூறுகின்றது. எனவே, சமயப் பொறுமையும் சகிப்புத் தன்மையும் தமிழ் நாட்டாரது சிறந்த பண்பு என்பது தமிழ்க் காவியங்களால் இனிது விளங்குகின்றது. தமிழகத்தின் பண்பே உருவெடுத்தாற்போல் விளங்கும் திருவள் ளுவர் கற்றறிந்த மாந்தர்க்குக் கூறும் கட்டுரை பொன்போற் போற்றத்தக்கதாகும். கல்விச் செருக்கால் வித்தகம் பேசவேண் டாம். இறைவனைப் பணிந்து வழிபட்டுப் பிறவிப் பயனை அடைதல் வேண்டும். 'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறி வன் நற்றாள் தொழாரெனின்' என்ற திருக்குறளின் கருத்தே தமிழ்க் காவியங்களின் கருத்து.

கோயிலில் நாத்திகம்

டாக்டர் மு. வரதராசன்

கோயில்களில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பல உள்ளன. அவற்றைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று ஒத்தி வைக்கும் மனப்பான்மை நெடுங்காலமாக இருந்துவருகின்றது. இவ்வாறு காலந் தள்ளுவதால், கோயில்களை வெறுக்கும் மனப்பான்மை மற்றொருபுறம் வளர்ந்துவருகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பே காந்தியடிகள் சமூக சீர்திருத்தம் செய்ய வேண்டிய கடமையை வற்புறுத்தி எழுதியபோது, "இத்தகைய சீர்திருத்தங்களைப் பிறகு பார்த்துக்கொள்வோம் என்று ஒதுக்கிவைப்பது கூடாது. நாட்டிற்குச் சுதந்தரம் வந்த பிறகு செய்வோம் என்று தள்ளிவைப்போமானால், நாம் சுதந்தரத்திற்கே தகுதியற்றவர்களாவோம்" என்று அறிவுறுத்தினர். அவரைப் பொறுத்த வரையில் தீண்டாமை உள்ள கோயிலில் நுழைவதில்லை என்ற நோன்பை மேற்கொண்டார்; அந்தத் துறையில், கோயிலுக்குள் தீண்டாமை பேசும் மடமையைப் போக்குவதில் ஓயாமல் உழைத்தார். இப்போதோ, நாடு உரிமை பெற்றுள்ள காலம். ஆகையால், இனியும் சீர்திருத்த முயற்சிகளைத் தள்ளிவைப்பது கூடாது. அவ்வாறு தள்ளிவைப்பதற்குக் காரணம், தன்னலமும் அறியாமையுமே என உணரவேண்டும்.

வீடு, தெரு, பள்ளிக்கூடம், கடை, தொழில்நிலயம், அரசியல் அமைப்புக்கள் முதலான பலஇடங்களிலும் மக்களிடையே

உயர்வுதாழ்வு வேற்றுமைகள் காட்டப்படுகின்றன. அவற்றை ஒழிக்கச் சட்டங்கள் செய்யப்படுகின்றன; தொண்டர்கள் தொண்டு செய்கின்றனர். இம்முயற்சிகளின் பயனாக வேற்றுமைகள் ஒழியும் காலம் வரும்; வந்தே தீரும்.

வீடு முதலியவற்றில் உள்ள வேற்றுமைகள் வேண்டும் என்றே ஏற்படுத்தப்பட்டவை; நல்லெண்ணத்தால் ஏற்பட்டவை சில; தன்னலமான தீய எண்ணத்தால் ஏற்பட்டவை சில; எல்லாவற்றையும் தொலைக்கவேண்டும் என்றே பாடுபடவேண்டும். உலகப்போக்கும் அதற்குத் துணைசெய்தே வருகின்றது.

ஆனால், கோயிலில் அப்படிப்பட்ட வேற்றுமைகள் புகுந்து மக்களைப் பிரித்து வைத்திருப்பதுதான் வியப்பாக இருக்கின்றது. எல்லோருக்கும் பொதுத்தந்தையான கடவுள் வீற்றிருக்கும் இடம் என்று கருதப்படும் கோயிலில் எந்த வேற்றுமையும் குடிபுகக் காரணம் இல்லை. ஒன்று, அந்த இடம் கடவுளுக்காக அமைக்கப்பட்டதல்ல, மனிதனுடைய அதிகாரம், ஆணவம், அறியாமை, தன்னலம் இவற்றை வழிபடுவதற்காகவே ஏற்பட்டது கோயில் என்று ஒத்துக்கொள்ளவேண்டும்; அல்லது, இவற்றை எல்லாம் கடந்து நிற்கும் ஒரு பெருஞ் சக்தியை நினைந்து வழிபடும் தூய இடம் அது என்று முன்வர வேண்டும். இன்று கோயில்கள் என்ன நிலைமையில் உள்ளன ?

மக்களிடையே இன்று காட்டப்படும் வேற்றுமைகளை இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று, பிறப்பால் வரும் சாதிவேறுபாடு; மற்றொன்று, பணத்தால் வரும் உயர்வுதாழ்வு வேறுபாடு. இவற்றுள், பிறப்பால் வரும் சாதிவேறுபாட்டைவிடப் பணத்தால் வரும் வேறுபாடு பொல்லாதது என்று விவேகாநந்தர் வீரமுழக்கம் செய்துள்ளார். நாமோ, முன்னதை ஒழிக்கப் பாடுபடுகின்றோம்; முற்றிலும் ஒழிக்காமல் தயங்கித் தயங்கிப் பின்னிற்கின்றோம். ஆனால், பின்னதாகிய பணத்தால் வரும் புதிய சாதி வேறுபாட்டை வளர்த்துவருகின்றோம்.

கோயிலுக்குள் இன்று தீண்டாமை சட்டப்படி ஒழிந்து விட்டது; ஆனல், பிறப்பாலாகிய சாதிவேறுபாடு இன்னும் கோயிலில் வாழ்ந்துவருகின்றது. எல்லோருக்கும் அம்மையும் அப்பனுமாக விளங்கும் பொதுத்தலைவன் என்று கடவுளைச் சொல்லி விட்டு, அவ்வாறே வழிபாடுகளும் செய்துகொண்டு, அதே நேரத்தில் நான் உயர்ந்த சாதி, அவன் தாழ்ந்த சாதி என்று வேறுபாடு செய்து அதனல், உரிமைகளிலும் சலுகைகளிலும் வேற்றுமை புகுத்துவதைவிடக் கொடுமை ஒன்று இல்லை. சமயத்தின் பெயரால் செய்யப்படும் பெரிய கொடுமை என்றே இதைச் சொல்ல வேண்டும். இன்ன சாதியார் இங்கே நிற்கவேண்டும், இன்ன சாதியார் அங்கே நிற்கவேண்டும் என்று சொல்லுகின்றவனையும், அதைக் கேட்டு மனம் உவந்து நடக்கின்றவனையும் விட நாத்திகர்கள் இல்லை என்று சொல்லவேண்டும். ஏன்? மற்றவர்கள் கடவுள் இல்லை என்று சொன்னல், இவர்கள் கோயிலிலே கடவுளின் முன்னிலையிலேயே கடவுளின் சட்டத்தை மீறுகின்றார்கள்.

இனிப் பணமுடைய சாதிக்கும் பணமில்லாச் சாதிக்கும் கோயிலில் காட்டப்படும் வேறுபாட்டை நினைக்கவும் துன்பமாக இருக்கின்றது. இந்தப் புதிய சாதி வேறுபாடு இன்னும் சில காலம் நீடிக்குமானல், கோயில் பெரிய வியாபார நிலையமாக, கள்ள வாணிகச் சந்தையாக மாறிவிடும். இப்போதே சில கோயில்கள் அவ்வாறு மாறிவருகின்றன. எந்தப் பொன்னும் பொருளும் கண்டு அஞ்சித் துறந்து பெரியோர்கள் கடவுளை நாடினர்களோ, அந்தப் பொன்னும் பொருளுமே இன்று கோயிலில் மதிப்பைத் தருகின்றன. கிறிஸ்தவர் கோயில்களிலும் முகம்மதியர் 'கோயில்'களிலும் இன்று செல்வருக்கு ஒருவகை வழிபாடும் ஏழைகட்கு ஒருவகை வழிபாடும் நடைபெறுவதில்லை. ஆனல், 'செல்வம் ஒரு மாயை' என்று சொல்கின்ற இந்துக்களின் கோயிலில், செல்வநிலைக்கு ஏற்றபடி தனிச்சிறப்பான வழிபாடு

கள் அமைந்துள்ளன. அதை அரசாங்கமும் அனுமதிக்கின்றது. அர சாங்க அலுவலர் கோயில்களில் இருந்துகொண்டு இவ்வகையான தீமையைக் கண்காணித்துப் பணம் திரட்டுகின்றனர். ஐந்து ரூபாய்க்கு இவ்வளவு அருச்சனை, பத்து ரூபாய்க்கு இவ் வளவு அருச்சனை என்றெல்லாம் பணத்தின் அளவுக்குத் தக்கபடி கடவுளைக் காட்டி விற்கும் வியாபாரம் கோயில் களில் நடைபெறுகின்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் மதிக்காத ஒன்று அங்கே மதிப்புப் பெறுகின்றது; அவர்கள் மதித்த அன்பு எங்கோ ஒதுக்கப்படுகின்றது. எல்லாம் அறிந்த கடவுளுக்கு நம் பெயரும் பிறப்பும் தெரியாதிருக்கும் என்று, பெயர் பிறப்பு முதலியவற்றைச் சொல்லிச் செய்யும் அருச் சனை, கோயில்களின் தூய்மையையும் பொதுத் தன்மையை யும் கெடுத்துவருகின்றது. பேசுவன, உலகம் காணாத பெரிய உண்மைகள், ஆனால், செய்வன, முற்றும் முரண்பாடான நாத்திகச் செயல்கள்!

மற்றுமொரு பெரிய கொடுமையையும் விரைவில் தொலைக்க வேண்டும். கோயில் இந்திர சாலங்களோ மற்றப் புரட்டு வித்தைகளோ செய்யும் இடமல்ல. இதயம் கனிந்து பரம் பொருளை நினைந்து வழிபடும் இடம் அது. அத்தகைய கனிந்த நினைவுகள் பல நாளும் எண்ணி நினைந்து பழகிய தாய்மொழி யிலேயே முடியும். அது இலக்கிய வளமற்ற மொழியாக இருந் தாலும், எழுத்து வழக்கே அற்ற மொழியாக இருந்தாலும், ஊமை மொழிக்கு அடுத்த நிலையில் உள்ளதாகவே இருந் தாலும், ஒருவன் தன் தாய்மொழியிலேயே கனிந்த நினைவு களை நினைந்து உருக முடியும். ஆனால், தமிழ்நாட்டுக் கோயில் களில் தமிழில் வழிபாடு இல்லை. ஏன்? தமிழில் இலக்கிய வளம் இல்லையா? வேறு சிறப்புக்கள் இல்லையா? உலகில் வேறு எங்கும் இல்லாத அளவிற்குப் பக்திப் பாடல்கள் தமிழ்மொழியில் இருக் கும்போது, ஏன் இந்தத் தவறு செய்யவேண்டும்? ஊர் ஊராகச்

சுற்றி ஆழ்வார்களும் நாயன்மார்களும் அன்பு கனிந்த பாடல்களைத் தமிழில் பாடி வைத்திருக்கும்போது, அந்த நன்றி யெல்லாம் மறந்து, நன்றிகொன்ற பாவிகளாய், கோயிலில் தமிழில் வழிபாடு செய்யக் கூசுவதா? இதயக் கனிவிற்குத் துணைசெய்யாத, பெரும் பாலோர்க்குப் பொருளும் விளங்காத, தாய்மொழி அல்லாத வடமொழியில் ஏன் வழிபாடு செய்யவேண்டும்? அதையும் தான் செய்யாமல், பிறரைக் கூலிக்குச் செய்விப்பது ஏன்? இது வழிபாடுதானா? அல்லது ஏமாற்றமா? ஏமாறுகின்ற மக்கள் இருக்கின்றார்களே என்றால், அவர்களைக் கண்டு அறிஞர்கள் இரங்கவேண்டும் அல்லவா? அதை விட்டு, அவர்களுடைய ஏமாற் றத்தைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக்கொள்வது ஆத்திகமா?

கோயில், கடவுளாட்சியை மதித்து வழிபடுதற்கு அமைந்த இடம்-ஆத்திகம் வளர்வதற்கு அமைந்த இடம். அத்தகைய இடத் தில் நாத்திகம் வளர விடுதல் தகுமோ?-கோயிலில் கடவுளாட் சியை மறுக்கும் செயல்கள் பெருகவிடுதல் தகுமோ?

கோயிலுக்கு வெளியே உள்ள நாத்திகம் பேச்சளவில் நிகழ் வது; ஆனால், மேற்கண்டவை செயலளவில் நிகழ்பவை. கோயி லுக்கு வெளியே நிலவும் நாத்திகம் கடவுளைப் பற்றிக் கவலை இல்லை என்பவர் பேசும் கொள்கை; ஆனால் மேற்கண்டவை கடவுளைக் கருதி வாழ்வதே வாழ்க்கை என்பவர் செய்யும்கொடுமை. மற்ற மூடப் பழக்கவழக்கங்கள் அறிவு குறைந்த மக்கள் இருளில் கிடந்து உழலுவதால் ஏற்பட்டவை; ஆனால், மேற்கண்டவை அறி வைத் தன்னலத்திற்குப் பயன்படுத்தும் வன்னெஞ்சர்கள் போற் றும் பழக்கங்கள். அதனால் மற்ற மூடப் பழக்கவழக்கங்களைவிட, நாத்திகப் பேச்சைவிட, கோயிலுக்குள்ளேயே கையாளப்படும் மேற்கண்ட நாத்திகப் பழக்கங்கள் மிகப்பொல்லாதவை; இவற் றைச் சீர்திருத்துவது முதல் கடமையாக வேண்டும்.

நமது கோவில்களும்
நாடும் சீர்திருத்தங்களும்

புலவர் அ. கி. பரந்தாமனர், M. A.

நமது தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான சிறு கோவில்களும் பெருங்கோவில்களும் உள்ளன. கடவுள் பக்தி மிகுந்த நம் நாட்டில் முதல் நூற்ருண்டிலேயே சில கோவில்கள் இருந்தன. ஆனல், அவை செங்கற்களால் கட்டப்பட்டவை. கி. பி. 7-ம் நூற்ருண்டில் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் கற்களால் கோவில்கள் கட்டத் தொடங்கியபின், இந்நாட்டில் கற்கோவில்கள் நூற்றுக்கணக்காகத் தோன்றலாயின. நாளடைவில் தமிழ்நாட்டில் வடநாட்டை விடவும் தெலுங்கு நாட்டைப் பார்க்கிலும் கேரள நாட்டைக் காட்டிலும் சித்திரக்கலைக்கும் ஒவியக்கலைக்கும் நிலைக்களமாக உள்ள பல நூற்றுக்கணக்கான கோவில்கள் தோன்றிவிட்டன. மன்னர்களுடைய உற்சாகத்தாலும் பொது மக்கள் ஆர்வத்தாலும் இந்நாட்டில் ஏராளமான கோவில்கள் எழும்பிவிட்டன. கோவில் இல்லாத ஊரில் குடியிருத்தலாகாது என்ற எண்ணம் தோன்றிவிடவே, பல பல சிற்றூர்களிலும் அளவற்ற ஆலயங்கள் சிறியனவும் பெரியனவுமாக ஆயிரக்கணக்கில் கட்டப்பட்டன. சில கோவில்கள் இயற்கை சூழ்ந்த மலைகள்மீதும் கடல்பக்கத்தும் கட்டப்பட்டன. திருப்பதிக்கோவிலும் கள்ளழகர் கோவிலும் இயற்கை யழகு வடியும் இன்பச்சூழலில் அமைந்திருக்கக் காணலாம். திருச்செந்தூரில் கடலின் அருகே முருகன் கோவில்

சாண்பார் கண்களுக்கு இன்றும் அழகிய காட்சி யளிப்பதை யாரே மறுக்கக்கூடும்? உயர்ந்த சிற்பக்கலைக்கு இலக்கியங்களாகத் தஞ்சைப் பெருவுடையார் கோவிலும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயமும் கங்கைகொண்ட சோழபுரத்துக் கவின்மிகுகோவிலும் இன்றும் விளங்குகின்றன. கங்கைகொண்ட சோழபுரத்துக் கோவில் பாழாய் இடிந்து கிடப்பினும் அதன் சிற்பக்கலையை இன்றும் கண்டு களிக்கலாம். வானம் பொய்ப்பினும் தான் பொய்யாது வளமுடன் ஓடும் காவிரியின் கரையிலிருக்கும் திருவரங்கப் பெருங்கோயிலும், தில்லையில் எல்லையற்ற வனப்புடன் விளங்கும் பொன்னம்பலமுள்ள திருக்கோவிலும் கோயிற்கலைச் சிறப்பின் மேன்மையைக் காட்டிக்கொண்டுள்ளன. நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடல்பெற்ற திருப்பதிகளில் விளங்கும் அழகான ஆலயங்கள் எத்தனை! தமிழ்நாட்டுக் கோவில்களுள் பெரும்பாலன கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்து அளிப்பனவாக உள்ளன என்பது உண்மையே.

ஆனல், பொதுவாக இந்தியாவிலுள்ள கோவில்கள், சிறப்பாகத் தமிழ்நாட்டுக் கோவில்கள் ஆன்மாவுக்கு விருந்தளிக்கக் கூடியனவாக இல்லாமலிருப்பது வருந்தத்தக்கது. அவை அங்கங்குள்ள மக்களை ஒன்று சேர்த்து, அவர்களின் நல்லொழுக்கத்திற்கும், நல்வாழ்க்கைக்கும், ஆன்ம முன்னேற்றத்திற்கும், சுகாதார நலத்திற்கும், பொதுமக்கள் கல்விக்கும், நாட்டு முன்னேற்றத்துக்கும் தொண்டு செய்கின்றனவா? இல்லை. பல கோவில்களில் மிகுந்த பணமுண்டு. சிதம்பரம் போன்ற கோவில்களுக்கு, அவைகட்கு என்று பணமில்லாவிட்டாலும் கோவில்களின் நிகழ்ச்சிகள் முட்டின்றி நடைபெறுவதற்குத் தனித்தனியாகப் பொருள் உண்டு. பெரும்பாலான கோவில்களுக்கு ஏராளமான நிலங்கள் உண்டு. என்ன இருந்தும் நம்நாட்டுக் கோவில்கள் நாட்டு மக்களின் நலனுக்கு நன்மை செய்யக்காணேம். அவை ஏதோ ஓரளவு மூட பக்தர்களைத் திருப்தி செய்கின்றனவே அன்றி உண்மையான

பக்தியை வளர்ப்பதற்கோ நாட்டு மக்கள் நலன்களுக்கு ஏற்றவை களைச் செய்வதற்கோ வசதியளிக்கவில்லை.

தமிழ்நாட்டில் சோழர்காலத்துக் கோவில்கள் செய்தவண்ணம் இக்காலத்துத் தமிழகத்துக் கோவில்கள் காலத்துக்கு ஏற்றவாறு தொண்டு புரியவில்லை. இக்காலக் கோவில்கள் பேருக்குக் கோவில்களாகவும், சிற்பத்துக்கு இருப்பிடமாகவும், பொருளற்ற சடங்குகள் விழாக்கள் இவற்றிற்கு நிலையங்களாகவும் நல்லறிவைப் புல்லறிவாக்கும் ஏஜெண்டுகளாகவும் உள்ளன, சோழர் காலத்தில் தமிழ் நாட்டுக்கோவில்கள் சமுதாய பொருளாதார கலைவாழ்விற்குப் பயன்பட்டன. அக்காலக் கோவில்கள் யாத்திரையாக வந்தவர்களுக்கும் உணவற்றவர்களுக்கும் உணவளித்தன. பொருள் விநியோகத்திற்கு அவை உதவி புரிந்தன; இசை, ஓவியம், சிற்பம், நடனம் முதலிய நுண் கலைகளை வளர்க்கும் சேவிலியாக விளங்கின. ஊராட்சி செய்வதற்குக் கோவில் மண்டபங்கள் பயன்பட்டன. ஊர் நீதி மன்றங்கள் கோவில் மண்டபங்களில் நடைபெற்றன. அக்காலத்தில் ஊர் மக்கள் அனைவரும் இந்துக்களாக இருந்ததாலும், ஊராட்சி சிறந்த நிலையில் இருந்ததாலும், அக்காலக் கோவில் மண்டபங்கள் மிகவும் ஊருக்குப் பயன்படுத்தப்பட்டன. கோவில்கள், சுருங்கக் கூறினல், கலா க்ஷேத்திரங்களாக, கலைப் பண்ணைகளாகத் தொண்டு புரிந்தன எனலாம்.

இன்னும் அக்காலக்கோவில்கள் கல்வியையும் வளர்த்தன. தென்னர்க்காடு ஜில்லாவில் எண்ணாயிரம் என்ற ஊரிலும் செங்கற்பட்டு ஜில்லாவில் திருமுக்கூடல் என்ற இடத்திலும் பெரிய கல்விச்சாலைகள் நடைபெற்றன. எண்ணாயிரத்துக்கோவில் 340 மாணவர்களுக்குத் தங்க இடமும் உண்ண உணவும் உடுக்க உடையும் அளித்துக் கல்வி புகட்டியது. 340 மாணவர்களுக்குப் பாடங் கற்பிக்கப் பதினைந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

திருமுக்கூடலில் இருந்த பள்ளி அறுபது மாணவர்களுக்கு உணவும் உறையுளும் உடையும் ஈந்து கல்வி அளித்தது. இவ்வாறே பல கல்விச்சாலைகள் கோவில்களின் ஆதரவு பெற்று நடந்தன.

பொதுமக்கள் உடல்நலத்துக்கும் சோழர் காலத்துக்கோவில்கள் தொண்டாற்றின. மருத்துவசாலைகள் கோவிலுக்குள்ளிருந்தன. ஒரு கோவிலில் இலவச மருத்துவசாலை கி. பி. 11-ம் நூற்றாண்டில் நடைபெற்றது. அம்மருத்துவசாலையில் பதினைந்து படுக்கைகள் நோயாளிகளுக்காக இருந்தன. மருத்துவர் ஒருவரும் ரண சிகிச்சைக்கு வைத்தியர் ஒருவரும் இரண்டு மருத்துவ தாதிகளும் இன்னும் மற்ற ஆட்களும் அவ்வைத்திய சாலையில் இருந்து பொது மக்களுக்குத் தொண்டு செய்தார்கள். கோவில் இவர்களுக்கு ஊதியமளித்தது. அங்கு ஏராளமாக மருந்துகளும் மூலிகைகளும் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. கால்நடைகளுக்கும் இலவச மருத்துவசாலை கோவிலால் நடத்தப்பட்டதுண்டு. இச்செய்திகளைக் கி. பி. 11-ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சோழர் கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

சோழ மன்னர் கோவில்களை மேற்பார்வையிட்டு வந்தனர். கோவில் நிர்வாகம் நன்றாக நடைபெறுவதைக் கண்காணிக்கத் தனியதிகாரிகள் இருந்தார்கள். இவ்வதிகாரிகள் 'தேவகர்மிகள்' என்று சொல்லப்பட்டார்கள். ஊராட்சி மன்றம் கோவில் நிர்வாகத்தை நடத்தி வந்தது.

மேற்கூறியவற்றிலிருந்து நாம் சோழர் காலத்தில் கோவில்கள் சமுதாயத்துக்கும் கலைவளர்ச்சிக்கும் தொண்டு செய்த நல்லற நிலையங்களாக விளங்கியிருந்தன என்று அறியலாம்.

இன்றைய தமிழ்நாட்டுக் கோவில்களின் நிலைமை என்ன? கோவில்களின் திருக்குளங்கள் தீர்த்தங்கள் என்று சொல்லப்படுகின்றன. ஆனல், அவை என்ன? அவை கிருமிகளுக்கு உறைவிடங்களாய்ப் பாசி படர்ந்து நோயைப் பரப்பும் திவ்ய தீர்த்தத் திருக்குளங்களாக விளங்குகின்றன. அத்தீர்த்தங்களில்

குளித்தால் நோய் வந்துவிடும் என்பதில் ஐயமில்லை. தில்லையம்பலத்துத் தீர்த்தமே அப்படி யிருக்குமாயின் மற்றக்கோவில் தீர்த்தங்களைப் பற்றிச் சொல்வான் என்? திருக்கழுக்குன்றக் குளமும் கும்பகோண மகாமகக்குளமும் இன்று நோய் வளர்க்கும் திருக்குளங்களாகவே உள்ளன. பல கோவில்கள் அழகிழந்து, ஒளியிழந்து, கலையிழந்து உயிரற்றுக் கிடக்கின்றன. அன்று பயன்பட்ட ஆயிரக்கால் மண்டபங்கள் இன்று தூரிஞ்சல்களுக்கு இடமாகவும், சோம்பேறிகளுக்கு மடமாகவும் உள்ளன. கோவிலினுள் தூய்மை இல்லை. விழாவிற்குச் செல்லும் பக்தர்கள் எந்த விதமான அசுத்தமும் அந்த இடங்களில் செய்யப் பின் வாங்குவதில்லை. மூலஸ்தானங்கள் இருட்டுக் குகைகளாய்க் குருட்டுப் பீடங்களாய்த் தீயநாற்றம் வீசும் களங்களாய்த் திருட்டுக்கு வாய்ப்பளிக்கும் இடங்களாய் இருக்கின்றன என்றால் யாராவது முன்வந்து இல்லை என்று மறுக்க முடியுமா? கோவிலில் வழிபாடு நடத்தும் குருமார்களுக்குப் போதிய கல்வி உண்டா? சொல்லும் வடமொழி மந்திரங்களைப் பொருளறிந்து சொல்ல வழி உண்டா? பக்திதான் உண்டா? கடவுள் பயமாவது உண்டா? யாராவது சொல்லட்டும்? நிர்வாகத்தை அரசாங்க அறநிலைக் கழகம் மேற்பார்வையிடுவது உண்மை. நிர்வாகத்தைச் சரிவர மேற்பார்வையிடவும், தலையிட்டு வேண்டிய சீர்திருத்தம் செய்யவும் அவ்வற நிலைக் கழகத்துக்குப் போதிய அதிகாரங்கள் உண்டா?

இந்து மத தர்ம பரிபாலன மசோதாவைப்பற்றிச் சென்னை மேல்சபையில் வாதித்தபோது, தலைசிறந்த பக்தரும், முன்னைய முதலமைச்சருமாகிய உயர்திரு O. P. இராமசாமி ரெட்டியார் 25-6-1949-ல் தமிழ்நாட்டுக் கோவில்களின் தற்கால நிலையை நன்றாக எடுத்துக் காட்டியுள்ளார். அவர் கூறியதாவது :

"பொதுநிதி வீணுக்கப்படுகிறது. கோவில்கள் கைவிடப்பட்டுப் பாழடைகின்றன. ஆந்தைகளும் வௌவால்களும் அங்குச் சஞ்சரிக்கின்றன.

"இந்திய முதலமைச்சர் நேரு, 'மதச்சார்பற்ற சர்க்கார் இந்திய சர்க்கார்' என்று கூறியுள்ளதனுல் கோவில்கள் அசட்டை செய்யப்பட வேண்டுமென்பதா? தர்ம சொத்துக்கள் தவருக நிர்வகிக்கப்படலாம் என்பது பொருள்ா? சமயக்கல்வி கூடாது என்றும், வழிபாடு செய்யுமிடங்களில் சுகாதார ஏற்பாடுகள் எல்லாம் வேண்டியதில்லை என்றும் சொல்ல முடியுமா? அவசியமில்லாதனவும் ஏராளமான பணச்செலவாவனவுமான வீண் வழக்குகளில் கோவில் பணம் அழியவேண்டும் என்பது பொருளா? உணவு தட்டுப்பாடு கடுமையாக உள்ள தற்சமயத்தில் கோவில் நிலங்களைக் கவனிக்கக் கூடாது என்று சொல்ல முடியுமா? கோவில் குளங்கள் அசுத்தமாகவும் ஆபாசமாகவும் இருந்து ஆயிரக்கணக்கான வியாதிகளை உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்வீர்களா? அரசியல் அமைப்பு நகலில் அரசாங்கம் மதச்சார்பற்றது என்று குறிப்பிட்டிருப்பதால், நான் மேலே சொன்ன சமூகப் பொருளாதாரத் தீமைகள் எல்லாவற்றையும் சர்க்கார் தொடர்ந்து சகித்துக்கொண்டுதான் இருக்கவேண்டும் என்று சொல்ல முடியுமா?"

முன்னைய அமைச்சர் தமிழ்நாட்டுக் கோவில்களைப்பற்றியும் அறநிலையங்களைப்பற்றியும் கூறிய அனைத்தும் உண்மையல்ல என்று யார் மறுக்க முடியும்? அவர் கூறியது இன்றைய கோவில்களின் உண்மைப்படம் என்பதில் யாரும் மாறுபட முடியாது. முன்னேர்கள் ஏற்படுத்தி வைத்த அறநிலையங்களும் இன்று அறத்தை மறந்து நிற்கின்றன. சென்னைக் குயப்பேட்டையில் மிக அண்மையில் சுப்பையா சுவாமிகள் என்பவர் வேதாந்தத் தொண்டு செய்து வந்ததால் அவர் தலைவராக இருந்த சாதுமகா சங்கத்துக்குப் பொதுமக்கள் பணவுதவி மிகுதியாகக் கிடைத்தது. கட்டடங்களும் பூஞ்சோலைகளும் எழும்பின. சொற்பொழிவுக்

கூட்டமும் அமைந்தது. சுப்பைய சுவாமிகள் மறைந்த பின் அச்சங்கக் கட்டடம் உறங்குகிறது; கேட்பாரற்றுக் கிடக்கிறது; பெரிய இடம் பயனற்றிருக்கிறது. கல்வி நிலயத்துக்குப் பயன் படக் கேட்டாலும், பொதுக்கூட்டங்கள் நடத்தக்கேட்டாலும் இடம் கிடைப்பதில்லை. மடத்தின் தலைவராவது அவ்விடத்தைக் கல்விக்குப் பயன்படுத்துகிருரா? அதுவுமில்லை. இதைப்போல் எத்தனையோ அறநிலையங்கள் மடாதிபதிகள் கையில் அகப் பட்டு மடிந்து கிடக்கின்றன. இவ்வாறே பல தர்ம ஸ்தாபனங் களும் உறங்குகின்றன. நமது சென்னை மாகாணத்தில் 27,000 கோவில்களும், 3000 மடங்களும், 25,000 தர்ம ஸ்தா பனங்களும் இருக்கின்றன. இவற்றுள், உண்மைத் தொண்டு புரிவன எத்தனை? உறங்கிக் கிடப்பன எத்தனை? இவற்றைச் சீர்திருத்த முற்படுபவர்களை முன்னேற்றமில்லாதவர்கள் தடை செய்கிருர்கள். சிலர் சத்தியாக்கிரகத்தில் இறங்கி மருட்டுகிருர்கள். சீர்திருத்தவாதிகள் எதற்கும் அஞ்சாது முதலில் பிரசாரத்தில் இறங்கவேண்டும். இப் பிரசாரம் பின்பு ஒரு வேளை இவற்றைச் சீர்திருத்த வழி செய்யலாம். அரசாங்கம் முன்வந்து சட்டத்தின் மூலமாய் இவற்றைச் சீர்திருத்த வேண்டும்.

கோவில்களில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் யாவை? ஹரிஜனங்கள் கோவில்களில் நுழைதல் கூடாது என்ற குறை ஓரளவு நீங்கியது. என்ருலும், இன்னும் பல கோவில்களில் ஹரி ஜன பக்தர்களை நுழைய விடுவதில்லை. எந்த வகையில் கோவி லுக்கு வரும் அந்தணரையோ மற்றவரையோ விட ஹரிஜன அன்பர்கள் குறைந்திருக்கிருர்கள்? இது முதலாவது நீங்குதல் அவசியம்.

கோவில் குளங்கள் மூடப்படவேண்டும், அல்லது சுத்தப்பட வேண்டும். சென்னைக்கடுத்த திருவள்ளூரில் அமாவாசை நாட் களில் ஏராளமாக மக்கள் பாவம் தொலையப் பாசி படர்ந்த குளத்தில் மூழ்குகிருர்கள். குளத்தைப் பார்த்தால் சுகாதார அறிவுள்ள

எவரும் கையையும் அத்திருக்குளத்தில் வைக்கமுற்பட்டார். இதைப் போன்று எத்தனையோ நூற்றுக்கணக்கான குளங்கள் தீர்த்தம் என்னும் பெயரால் இருக்கின்றன. சென்னைத் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி பெருமாள் கோவில் குளமும் இப்படித்தான் இருக்கிறது. அவற்றை முன் கூறியவாறு சுத்தஞ் செய்யவாவது மூடி விடவாவது பொதுஜனக் கருத்து உருவாக வேண்டும். கோவிற் பணத்தால் அத்தகைய தீர்த்தங்களைச் சுத்தஞ் செய்யுமாறு அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். அத்தீர்த்தங்களைச் சுத்தஞ் செய்யக் கோவில் நிர்வாகிகள் முன் வராவிட்டால் அவற்றைத் தூர்த்துவிட்டுப் பூஞ்சோலை அமைத்து அரசாங்கம் அதற்கான செலவைக் கோவிலிடத்திலிருந்து வற்புறுத்திப் பெறவேண்டும்.

கோவில் மண்டபங்களும் மூலஸ்தானங்களும் தூய்மையாக இருக்குமாறு சீர்திருத்தங்கள் வரவேண்டும். மூல ஸ்தானங்களைக் காற்றோட்டமும் மிகுந்த வெளிச்சமும் உள்ள இடங்களாக மாற்றியமைக்கவேண்டும். திருத்தணிகைத் தணிகாசலபதி ஆலயத்தில் சிறிய அளவு வெளிச்சம் வர மாறுதல் செய்யப்பட்டது. வேறு சில கோவில்களிலும் இச்சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இது போதாது. மிகுந்த வெளிச்சமும் காற்றோட்டமும் வரும்படி செய்வது நிர்வாகிகளின் தலைசிறந்த கடமையாகும். சுகாதாரத்துக்காவது இச்சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதைக் கோவில் தர்மகர்த்தர்கள் உணர்வார்களாக.

கோவில்களில் வழிபாடு நடத்துபவர்கள் பிராமணர்களாக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. அறிவும் ஒழுக்கமும் உண்மை பக்தியும் தற்காலக்கலையறிவும் உள்ளவர்கள்-யாராயிருப்பினும்-வழிபாடு நடத்துபவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் தமிழில் வழிபாடு நடத்தவேண்டும். இவை மிக விரைவில் வரவேண்டிய சீர்திருத்தங்கள் பூசைகளிலும் அலங்காரங்களிலும் வீண் உற்சவங்களிலுமட்டும்

கவனம் செலுத்துவது பலன் தராது. கோவில்கள் தக்க அறநிலையங்களாக இருந்தால் கோவில் செல்வோர் தொகை எப்படிக்குறையும்? அங்கு அறிவுக்கு இடமில்லாமலிருப்பதாலும், அன்புக்கு வழியில்லாமலிருப்பதாலும், உயர்ந்த ஒழுக்கத்திற்கு வழி காட்டிகள் இல்லாமலிருப்பதாலும் கோவில்கள் இன்று பயனற்றுக் கிடக்கின்றன. வீண்போட்டி உற்சவங்களால் இப்போது பயன் உண்டா? மூடத்தனமான விழாக்களால் மக்கள் ஆன்ம வளர்ச்சிக்கு ஏதாவது பயன் உண்டா? சிந்தித்துப்பாருங்கள். திருவிழாக்கள் குறைதல் வேண்டும். அந்த விழா, இந்த விழா, எந்த விழாவும் ஆன்மவளர்ச்சிக்கு அரண்செய்வதில்லை. மக்கள் வேடிக்கை பார்க்கிறார்களே அல்லாமல் பக்தியில் வளரவில்லை. வெள்ளி தோறும் நல்லறிவும் ஒழுக்கமும் உள்ளவர்களால் கோவிலுக்கு வருபவர்களுக்கு நல்வாழ்க்கை உபதேசங்கள் நடைபெறவேண்டும். வீண் கதைப்பிரசங்கங்கள் விஞ்ஞான அறிவுமிக்க இக்காலத்தில் பயன்படா. தேங்காய் உடைப்பதும் கற்பூரம் கொளுத்துவதும் அர்ச்சனை செய்வதும் மூட அறிவு கொண்ட மக்களால் பக்தியின் அறிகுறிகளாக நம்பப்படுகின்றன. தேங்காய் உடைத்தால் வெண்மையாக இருப்பதுபோலக் கடவுள் முன்னிலையில் உள்ளம் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதற்கு அடையாளமாகத் தேங்காய் உடைப்பது தோன்றியது. கற்பூரம் கொழுந்துவிட்டு எரிந்து உருகுவதுபோல உள்ளம் கசிந்துருகவேண்டும் என்பதைக் காட்டுவதற்குக் கற்பூரம் எரிக்கப்படும் வழக்கம் ஏற்பட்டது. இன்று அவை வெறுஞ்சடங்குகளாயின. அறவொழுக்கங்களை மக்களுக்கு அளிக்கும் நல்லற நிலையங்களாகக் கோவில்கள் இக்காலத்தில் விளங்கினாற்றான் நிலைத்துவாழும்; இல்லாவிடில் அழியும்.

இவைமட்டும் போதா. சோழர்காலத்துக் கோவில்களின் தொண்டை இக்காலக் கோவில்களும் ஏற்று நடத்தவேண்டும். சமயவெறியூட்டும் சமயப்பிரசாரங்களில் கோவில்கள் முனைந்து விட்டால் இந்துமத அழிவுக்கு அவை வழி செய்தனவாகும். இந்து

மதம் பிறசமயங்களைப்போல் என்றும் மதவெறி யூட்டியதில்லை எம்மதமும் சம்மதமே என்று இந்து மதம் பிரசாரம் செய்து வெற்றி பெற்றுள்ளது. சமரச சன்மார்க்கமே இந்துமதக்கொள்கை யாகும். இந்து சமயம் மதவெறியை மக்களுக்கு ஊட்டியிருந்தால், பிற சமயங்கள் இந்நாட்டில் கால்வைத்து வளர்ந்திருக்க முடியுமா? இன்பவாழ்வையே, சமாதான வாழ்வையே பல கட்டுக்கதைக ளால் இந்து சமயம் என்றும் வற்புறுத்தி வந்தது. ஆகையால், கோவில்கள் மதவெறியூட்டும் சமயப்பிரசாரத்தில் நுழையாமல் பொதுமக்களுக்கு அறிவளிப்பதும் நற்பண்பமைப்பதுமாகிய நற்றொண்டில் ஈடுபடவேண்டும்.

சென்னை அரசாங்கத்துக்கு வருமானம் 48 கோடி ரூபாய் ஆகும். அதில் அரசாங்கம் கல்விக்கு 13 கோடி ரூபாய் செலவு செய்கிறது. இது போதாது. இன்னும் கல்விக்காக அரசாங்கம் அதிகம் செலவு செய்யவேண்டும். ஆனால் பணம் இல்லை. கல்விக்குப் பொருளின்றி அரசாங்கம் திண்டாடு கிறது; திணறுகிறது. நமது கோவில்கள் கல்வித் தொண்டை மேற்கொள்ள வேண்டும். வீண்செலவுகளையும் பொருளற்ற விழாச் செலவுகளையும் குறைத்துக் கல்விக்கு அப்பொருளைப் பயன்படுத்த வேண்டும். தக்க குருமார்களை ஆக்கும் கல்வியிலும் கோவில்கள் ஓரளவு பொருள் செலவிடட்டும். திருப்பதி தேவஸ்தானம் இத்தகைய தொண்டு செய்வது பாராட் டத்தக்கது. பல கோவில்கள் அதைப் பின்பற்ற வேண்டும்.

கோவில்கள், பிச்சைக்காரர்களைச் சேர்த்து அவர்களைப் பாது காப்பதிலும் முனையவேண்டும். இன்றைய கோவில்கள் பிச்சைக்காரர்களை வளர்க்கும் நிலையங்களாக உள்ளன. அவை அப்படியில்லாது பிச்சைக்காரக் காப்பளிப்பு நிலையம் ஒன்று அமைத்துத் தொண்டுபுரிய வேண்டும். உழைக்கக்கூடிய பிச்சைக்காரர்களைக் காய்கறிகள் பயிரிடச் செய்து அவற்றை விற்று நிலையத்தை நடத்தவேண்டும். உழைக்க முடியாத

வயதானவர்களுக்குக் கவலையின்றி வாழப் பாதுகாப்பளிக்க வேண்டும். சிற்றூர்களிலும் பேரூர்களிலுமுள்ள கோவில்கள் இத்தொண்டை ஏற்றுச் செய்தால் நாட்டு வறுமையை ஓரளவு குறைக்க வழி ஏற்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஹரிஜனத்தொண்டில் சில கோவில்கள் ஈடுபடலாம். சேரியில் கல்விச்சாலை வைத்தல், மருத்துவசாலை வைத்து நடத்தல் முதலிய நற்றொண்டில் கோவில்கள் முனைந்து நிற்கவேண்டும். ஹரிஜன முன்னேற்றத்தில் நமது கோவில்கள் ஈடுபடுமானால் அவை உலக மதிப்பைப்பெறும்; மக்கள் அன்பைப் பெறும். குருட்டு நம்பிக்கை யுள்ளவர்கள் விரைவில் மறைந்து போவார்கள். முன்னேற்றத்தில் எண்ணமுள்ள கோவில் நிர்வாகிகள் இத்தகைய தொண்டில் முனைந்து நின்றால், எதிர்ப்புகள் சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்தொழியும்.

பல கோவில்களுக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. வேண்டியவர்களுக்கு அவை குறைந்த தொகைக்குக் குத்தகை விடப்படுகின்றன. அந்த ஏராளமான நிலங்களைக் கூட்டுப் பண்ணை முறையில் உழுதுப் புதுவகையில் பயிரிடக் கோவில்கள் முயற்சி செய்யவேண்டும். கோவில் நிர்வாகிகள் இத்தொண்டில் உண்மையாக உழைத்தால் உணவு உற்பத்தி இந்த நாட்டில் மிகுதியாகும் என்பதில் ஐயம் இல்லை. அதற்கென்று நிர்வாகிகள் தேர்ந்த அலுவலாளர்களை நியமித்து வேலை செய்ய வேண்டும். சென்னை மாகாணத்திலுள்ள 27000 கோவில்களுள் நாட்டுப் பஞ்சத்தை நீக்க 2700 கோவில்களாகிலும் பாடுபடலாமே! இக்கோவில்கள் இந்த நற்காரியத்தைச் செய்யலாகாதா? இதற்குக் கோவில் தர்மகர்த்தர்கள் அறிவுடையவர்களாகவும் நாட்டுப் பற்றுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

பெரும்பரப்பாக நிலங்களையுடைய கோவில்கள் புதுமுறையில் உணவு உற்பத்திக்கு உழைத்தால், நாட்டில் உணவுப்பஞ்சம்

ஓரளவு குறையுமே. நடமாடும் கோவில்களாக உள்ள மக்களுக்குச் செய்யும் தொண்டல்லவா இது? 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்று நம் நூல்கள் கூறுகின்றனவே. கோவில் நிர்வாகிகள் இந்தத் திருத்தொண்டில் ஈடுபட்டால் ஈசன் அருள் பெறலாமே. நிர்வாகிகள் இதை உணர்வார்களாக!

பொதுமக்கள் அறிவு வளர்ப்பதில் இன்று நூல் நிலையங்கள் நன்ருகத் தொண்டு புரிகின்றன. அந்த அந்தச் சிற்றூரில் இருக்கும் கோவில்கள் இந்த நூல் நிலைய வேலையைச் செய்தல் கடினமா? அந்த அந்த ஊர்களுக்கு ஏற்றனவும் அங்கங்குள்ள மக்கள் தொழிலுக்கு ஏற்றனவுமாகிய நூல்களை வாங்கி வைத்து நூல் நிலையத்தை ஆரம்பித்து அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரியலாம்.

கோவில்கள் இத்தகைய சீர்திருத்தத்தொண்டுகளில் நுழைய வேண்டும். ஒரே கோவில் எல்லாத் தொண்டுகளையும் ஏற்றுச் செய்ய முடியாது; அங்கங்குள்ள மக்களுடைய முன்னேற்றத்துக்கு ஏற்றவாறும் பொருள் நிலைக்குத் தகுந்தவாறும் ஒவ்வொரு கோவிலும் ஏதாவது ஒவ்வொரு தொண்டை ஏற்றுச் செய்ய வேண்டும். இவைகளுள் சில முன்னமே நம்கோவில்கள் செய்தவை. இப்போதுள்ள கோவில்கள் அத்தகைய திருப்பணிகளை மீண்டும் செய்யவேண்டும். அதற்குக் கோவில் நிர்வாகிகள் தற்கால அறிவுடன் மக்கள் முன்னேற்றத்தில் எண்ணமுள்ளவர்களாக இருக்கவேண்டும். இவை செய்ய முடியாதவை அல்ல. மனமுண்டானல் வழி உண்டாகும். இச்சீர்திருத்த வழிகளில் நமது கோவில்கள் முனைந்து நின்ருல் அவைகளுக்குப் பொது மக்களிடமிருந்து ஆதரவும் அரசாங்கத்திடமிருந்து உதவியும் கிடைக்கும்.

கிறிஸ்தவக் கோவில்களைப் பாருங்கள். அவை இவ்வேலைகளைத் திறம்படச் செய்கின்றன. மதமாற்றத்தில் ஓரளவு கிறிஸ்தவ ஆலயங்கள் முனைந்து நின்ருலும், அவை தொண்டர்கள்

மூலமாய் நம் நாட்டுக்கல்வி முன்னேற்றத்துக்கும் நம்நாட்டு மக்கள் சுகாதார முன்னேற்றத்துக்கும் செய்த தொண்டுகளை மறக்க முடியுமா? மறுக்க முடியுமா? கிறிஸ்தவ ஆலயங்களில் வீண் விழாச்கள் கிடையா; பொருளற்ற போட்டி உற்சவங்கள் கிடையா. அவை ஆன்ம முன்னேற்றத்துக்கு நல்லொழுக்க உபதேசங்களை ஞாயிறுதோறும் செய்கின்றன. குருமார்கள் தற்காலக்கல்வி மிகுந்த அறிஞர்கள். நம் நாட்டிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்கள், பல்வேறு தொண்டுகளுள் ஏற்ற தொண்டைத் தேர்ந்தெடுத்து நன்றாக அதைச் செய்து வருகின்றன. ஆலயங்கள் சுத்தமாகவும் அழகாகவும் வைக்கப்பட்டுள்ளன. நம்முடைய ஆலயங்களும், கிறிஸ்தவக் கோவில்கள் செய்வனவற்றுள் நல்லவற்றை ஏற்று நம் மக்கள் முன்னேற்றத்துக்கு அரண்செய்யும் வகையில் தொண்டு செய்யவேண்டும்.

காலம் மாறிவிட்டது. பழமையிலே பற்றுக்கொள்வதில் பயனில்லை. ‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினான’ என்று இலக்கணத்தில் கூறியது கோவில்களின் வாழ்விலும் பொருந்தும். நம் கோவில்கள் தற்காலத்துக்குத் தகுந்தவாறு சீர்திருத்திக்கொள்ளாது பழையபடியே இருந்தால், அவை நிலைத்து வாழ்வது முடியாது. நம் கோவில் நிர்வாகிகள் இந்த உண்மையை உணரவேண்டும். நம் கோவில்கள் ஒற்றுமையோடு இச்சீர்திருத்தங்களில் முனையவேண்டும். முனையும் நாள் எந்நாளோ அந்நாளே, நம் கோவில்கள் புனிதமடையும் நன்னாளாகும். அந்நாளே இந்துமதம் ஓங்கி வளர அடிப்படை போட்ட இனிய நாளாகும்.

சமயப் புரட்சி !

ம. பொ. சிவஞானம்

தமிழகத்தைப் போன்று விண்ணை யிடிக்கும் கோபுரம் உடைய கோயில்கள் வேறு நாடுகளில் இல்லை. மனங்கவரும் மதில்கள், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கோபுரம், சிந்தனையைக் கிளறும் சிற்பங்கள் இவ்வளவையும் தமிழகத்துக் கோயில் களில்தான் காண முடியும். திருவரங்கம் பெரிய கோயிலைப் பார்த்தால் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் கோட்டையைப்போன்று காட்சியளிக்கின்றது. மதுரைக் கோயிலில் உள்ளும் புறமும் காட்சியளிக்கும் சிற்பங்களைக் காணுந் தோறும், நமக்கு ஏற்படும் பெருமிதந்தான் என்னே!

கீழ் மக்களையும், மேன்மக்களாகச் செய்யவேண்டும் என்பதே கோயில்களைக் கட்டியவர்களின் குறிக்கோள். ஆனால், பிற்காலத் தில் தமிழ் நாட்டுக் கோயில்களில் ஆதிக்கம் கொண்டவர்கள், தமிழரில் மேன்மக்களையும் கீழ்மக்களாக்கிய கொடுமையை என்னென்பது!

சென்னை மாகாணத்தில் 28,000 கோயில்கள் இருப்பதாக அரசாங்கத்தாரின் அறிக்கை கூறுகிறது. (முச்சந்திப் பிள்ளை யார், தெருவீதியம்மன் போன்ற ஏழைக் கடவுளர்களின் இடிந்து பட்ட கோயில்கள் எல்லாம் இந்தக் கணக்கில் சேர்ந்திரா என்ப

தில் ஐயமில்லை.) இந்தக் கோயில்கள் யாரால் கட்டப்பட்டன? தமிழகத்தைப் பொறுத்தவரையில், கோயில்களைக் கட்டியவர்கள் தமிழினத்தின் பழங்குடி மக்கள். ஆம்; கோயில்களைக் கட்டிய உழைப்பு தமிழருடையதே. ஆனால், அதை நிர்வகிக்கும் உரிமை மட்டும் தமிழரில் ஒரு சிறு குழுவினரிடமே இருந்து வருகிறது. எந்தக்காலத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த உரிமை இந்துத் தமிழர்கள் எல்லோருக்கும் சமமாக்கப் படக் கூடாது என்றும் பேசப்படுகிறது; அச்செயல் சாஸ்திர விரோத மென்றும் சாதிக்கப்படுகிறது!

கோயில்கள் எதற்காகக் கட்டப்பட்டன? மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தவே என்பதை எவரும் மறுக்க முடியாது. "மக்கள் துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்தது மிந்நாடே" என்றார் பாரதியாரும். ஆனால், இன்றைய நிலைமை என்ன? கோபுர வாயிற்படியிலிருந்து இறைவன் அமர்ந்துள்ள 'இருட்டறை' வரைக்கும் ஒவ்வோர் அடி நிலத்திற்கும் ஒவ்வொரு தத்துவம்! இன்ன இடத்தில், இன்னசாதி தான் நிற்காலம்; இன்ன சாதி நிற்கக்கூடாது என்ற இறுமாப்பு வாதம்!

"அன்பெனும் பிடியுள் அகப்படுவான் ஆண்டவன்" என்றார் அருட்சோதி வள்ளலார். ஆனால், இன்று ஆலயத்துக் கடவுளர் எல்லாம் அடங்கியிருப்பது அன்பெனும் பிடியுள் அல்ல; அர்ச்சகரின் பிடியிலாகும். இந்த நிலை தொலைந்து காசியிலிருப்பது போன்று கடவுளர் சிலைகளை எல்லோரும் தொட்டுத் தொழும் உரிமை இங்கேயும் இருக்க வேண்டும். பக்தருக்கும் கடவுளருக்கும் இடையே உள்ள தடைகள் அனைத்தும் எடுபடவேண்டும்.

தமிழ்மொழி எல்லாத்துறைகளிலும் மெல்ல மெல்ல முன்னேறி வருகிறது. ஆங்கிலத்தில் வழங்கி வரும் கலைச்சொற்களை

தமிழில் பெயர்த்து வருகின்றனர். இன்னும் மொழிவழி மாகாணம் பிரிக்கப்படவில்லை யென்றாலும், தமிழை அரசியல் மொழியாக்கும் முயற்சி ஒரு ஜில்லாவில் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் தமிழே அரசியல் மொழியாக ஆகப்போகிற காலமும் அதிக தூரத்திலில்லை.

ஆனால், சமயத்துறையில் மட்டும் தமிழுக்குரிய இடத்தை வடமொழி ஆக்கிரமித்திருக்கும் நிலை இன்னும் அகன்றபாடில்லை. இந்த நிலை நீங்கி, மக்கள் வாழும் இல்லங்கள் தோறும்—வழிபடும் கடவுளரின் ஆலயங்கள் தோறும்—தமிழே ஆட்சி பெறச் செய்ய வேண்டும்.

"காட்டிலே மறைக்கதவம் திறந்தது எங்கள் கன்னித் தமிழ்; எலும்பைப் பெண்ணுருவாக்கியது எங்கள் இன்பத் தமிழ்; முதலையுண்ட பாலனையழைத்தது எங்கள் முத்தமிழ்" என்றெல்லாம் கன்னித் தமிழுக்குக் கடவுள் தன்மை கூறாத புலவர் இல்லை. ஆனால், இவ்வளவு பெருமையுள்ள தமிழுக்கு ஆலயத்தில் வாழ உரிமை இருக்கின்றதா? அதுதான் இல்லை. தமிழகத்திற்கு வந்த மொழியான வடமொழிக்குள்ள உரிமை நம் சொந்த மொழியான செந்தமிழுக்கு இல்லையென்றால் இதைவிட அவமானம் நமக்கு வேறென்ன வேண்டும். முருகனைத் தமிழ்த் தெய்வம் என்றனர் முன்னோர். 'முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான் முருகன்' என்றார் அருணகிரியார். அந்த முருகன் கோயில்களில்கூட தமிழுக்கு முதலிடம் இல்லை! இந்த நிலை மாறி தமிழகத்துக் கோயில்கள் எல்லாவற்றிலும் தமிழ்மறையே ஓதப்பட வேண்டும். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பிரபந்தம் போன்ற தமிழ் மறைகளைப் பண்ணோடு கலந்து பாடப் பயிற்சி பெற்றவர்களையே அர்ச்சகர்களாகவும் பட்டாச்சாரியர்களாகவும் அமர்த்த வேண்டும்.

ஆனால், பெருவாரியான தமிழர்களிடையே இன்னும் வடமொழி மோகம் விட்டபாடில்லை. பண்டைக்காலத்தில்

வடமொழியில்தான் இறை வழிபாடு நடைபெற்று வந்ததாக நம்புகின்றனர் மக்கள். இது தவறான எண்ணம்.

குமரி முதல் இமயம் வரை தமிழ் மொழியே ஆட்சி செலுத்திய காலம் ஒன்று உண்டென்பதை ஆராய்ச்சியாளர் மூலம் அறிகிறோம். அந்தத் 'தமிழ் இந்தியா' வில் வடமொழி தலைகாட்டியது கிடையாது. அந்தக் காலத்தில், தமிழர்கள் இறைவழிபாடு நிகழ்த்தாமலா இருந்தார்கள்!

ஹரப்பா, மொகஞ்சதரோ நகரங்களைப்பற்றிய ஆராய்ச்சியிலிருந்து, சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழர் நாகரிகம் படைத்த மக்களாக வாழ்ந்திருந்தனர் என்று நிச்சயிக்க முடிகிறது. எனவே, உலகத்திலேயே மிகப் புராதன கால நாகரீகத்தைப் படைத்த நமக்கு, இடையே வந்த வடமொழிதான் கடவுள் வழிபாட்டு மொழியாக இருக்க முடியும்—இருக்க வேண்டும் என்று நம்புவது எவ்வளவு அறியாமை!

ஆலயங்களில் வழிபாட்டுக்குரிய – பாடல்கள் – எல்லாம் வடமொழியிலேயே சொல்லப்படுகின்றன. ஏன், மூவர் தேவாரத்தைப் பாடினால், அர்ச்சகருக்கு மூச்சு முட்டிப் போகுமா? மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல், இறைவனின் திருவுள்ளத்திற்கு ஏற்காதா?

"வேத மோதி விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை உலகில் மற்றைய ரிலரே"

என்பது சிவப்பிரகாசரின் திருவாக்கு. அத்தகைய திருவாசகத்திற்கு இறைவனின் திருக்கோயிலில் இடமில்லையென்றால், அதைத் தமிழர் பொறுத்துக்கொள்ளலாமா?

வடமொழி தமிழகத்தில் புகுமுன்னரே, தமிழருக்கு இறை வழிபாடு இருந்து வந்ததென்று ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கின்றனர். வட மொழி புகுந்த பிற்காலத்தில் வழிபாட்டு முறைகளிலே மாறுதல்கள் தோன்றியிருக்கலாம். ஆனால், வழிபாட்டு வழக்கம் தொன்று தொட்டே இருந்து வந்திருக்கிறதென்பதை மறுப்பதற்கில்லை. இடைக்காலத்தில்தான் இந்த வழிபாட்டுத் துறையில் வடமொழி ஆதிக்கம் பெற்றுவிட்டது.

'வழி பாடு வேண்டுமோ, வேண்டாமா?' என்பதைப் பற்றி இங்கு ஆராய விரும்பவில்லை. வழி பாட்டில் நம்பிக்கையுடையோர், நாட்டு மொழியைக் காட்டிக் கொடுத்து, வந்த மொழியாகிய வடமொழிக்கு அடிமைப்படக் கூடாதென்பதே எனது வேண்டுகோள். இந்தக் கொள்கையை வழிபாட்டு முறையில் நம்பிக்கை யற்றவர்களும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

'ஆலய வழிபாடு வழக்கம் குறைந்து வருகிறதே!' என்று அங்கலாய்க்கின்றனர் ஆத்திக வாதிகள். வாழ்வில் நைந்த மனதுக்குச் சாந்தி தேடும் இடம்தானே கோயில். ஆனால், ஆலயத்திலே புரியாத மொழியில் தெரியாத மந்திரத்தைக் கேட்டுத் திகைத்துக்கொண்டு நிற்பதாலோ, அர்ச்சகருக்குக் காணிக்கை தந்து, அவர் தயவால் ஆண்டவனைக் கை தொழுது கன்னத்தில் போட்டுக் கொள்வதாலோ சிந்தை தெளிந்து விடுமோ? அலைமோதும் உள்ளம் அமைதி பெற முடியுமா? சஞ்சலப்படும் மனம் சாந்தியடைய இயலுமா? இதைச் சமய வாதிகள் சிந்திக்க வேண்டும்.

சாதிகளற்ற சமுதாயத்தைப் பற்றி எங்கும் பேசப்படுகிறது. பிறப்புக் காரணமாக சாதி வேற்றுமை காண்பது

பேதமை என்பதை அறிவுடைய எல்லோரும் அங்கீகரிக்கின்றனர். ஆனால், கோயில்களில் இன்று நாம் காண்பது என்ன? குறிப்பிட்ட ஒரு சாதியினரே 'அர்ச்சகர்' என்ற பெயரில் ஆதிக்கம் செலுத்தும் நிலையல்லவா? அரசாங்க அலுவலகங்களிலும் அறிவை வளர்க்கும் கல்லூரிகளிலும் வகுப்புவாரி ஆள் எடுக்கும் முறையை ஆட்சேபிக்கின்றனர். "தகுதிக்கும் திறமைக்கும் முதலிடம் வேண்டும்; சாதியாலும் சமயத்தாலும் அதற்குத் தடை விதிக்கக் கூடாது" என்றெல்லாம் கூச்சலிடுகின்றனர். இதே குழுவினர் அறநிலையங்களான கடவுளர் கோயில்களில் வகுப்புவாதத்தை வளர்த்து வருகின்றனர்! கல்லூரிகளில் இடம் பிடிக்கவும், அரசாங்கக் காரியாலயங்களில் பதவி பெறவும் கூறப்படும் வாதம் கோயில்களுக்கு மட்டும் பொருந்தாதா? இனியேனும் கோயில் வழிபாடு செய்விக்கும் அர்ச்சகர்—பட்டாச்சாரி வேலைக்குப் பிறப்பைக் காரணமாகக் கொண்டு உரிமைதரும் முறையைப் போக்க வேண்டும். சமயப்பற்றும், நல்லொழுக்கமும், உலகியலறிவும், தமிழ் மறைகளை ஓதும் திறமையும் உள்ளவர் யாராஞலும், எந்தச் சாதியினராஞலும் அவருக்கு அர்ச்சகர், பட்டாச்சாரி தொழிலில் அமர உரிமை இருக்க வேண்டும். இப்படிக் கேட்பது வகுப்புவாதமல்ல; வாழும் நெறி.

விவசாயத் தொழில் புரிய வேண்டிய வேளாளர், வேதியருக்குரிய ஆசிரியத் தொழிலை மேற்கொள்கிருர். ஆசிரியத் தொழிலுக்குரிய வேதியர், ஆஸ்பத்திரி சர்ஜஞக வருகிருர். பறையடிக்கும் தொழிலுக்குரிய நந்தன் குலத்து அறிஞர், பாராளு மன்றத்தின் தலைவராக வீற்றிருக்கிருர். இவை நாம் அன்ருடம் பார்த்து வரும் காட்சிகள். சமூகத்தில் காணும் இந்த புரட்சிக்கு சமயம் மட்டும் விதிவிலக்கல்ல.

எந்த ஒரு தொழிலிலும் பண்டை வழக்கப்படி அதற்குரிய சாதியார்தான் ஈடுபட வேண்டுமென்ற விதி விடைபெற்றுக் கொண்டது.

ஆலய வழிபாடு தமிழிலேயே நடைபெற வேண்டும் எனக்கூறுவதோ, வழிபாட்டுத் தொழிலில் சாதி வேற்றுமை கூடாதென்று வற்புறுத்துவதோ நாத்தீக வாதமல்ல; நாட்டில் பரவிவரும் நாத்தீகத்தைத் தடுக்கவும், ஆத்தீகத்தின் பெயரால் மக்களைச் சுரண்டி வாழும் கொடுமையை ஒழிக்கவும் சரியான வழி.

வடமொழியைத் தேவ மொழி என்று நாட்டு மக்கள் நம்பியிருந்த காலத்தில், அம்மொழி ஆலயத்தில் ஆட்சி பெற்றிருக்கலாம். ஆனால், மக்கள் பேசும் மொழிகளிலே தேவ மொழியென்றும், முன்னது உயர்ந்த மொழி, பின்னது தாழ்ந்த மொழி என்றும் சொல்லப்படும் கூற்றை நம்பும் காலம் மலையேறி விட்டது.

என்று ஆலயத்திலிருந்து தமிழ் வெளியேற்றப் பட்டதோ, என்று சமயத்தின் பெயரால் மக்களை எய்க்கும் சடங்குகள் தோன்றியதோ, அன்று முதல்தான் நாத்திகம் நம் நாட்டில் பரவலாயிற்று. சமயத்தில் புகுந்த சதிகளைக் காரணமாகக் கொண்டு ஒழுக்க சமயத்தையும் ஒழித்துவிட வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருவதை நான் அறிவேன். இது ஒரு தீமையைத் துணைகொண்டு, இன்னொரு தீமையை வளர்ப்பதாகும்.

இந்த இரு தீமைகளையும் ஏககாலத்தில் எதிர்த்து ஒழுக்க சமயத்தை நிலைநாட்ட வேண்டியது அவசியமே. ஆனால் இன்று நாட்டில் நிலவுவது ஒழுக்க சமயமோ? இல்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை. சங்க காலத் தமிழகத்தில் நிலைத்திருந்த ஒழுக்க சமயம் ஒழிந்தே போயிற்று. இதற்குக் காரணம் யார் என்பதைக் கண்டு பிடித்தால், அவர்கள்தான், நாட்டில் நாத்திகம் பரவ, சீர்திருத்தம் என்ற பெயரால் சீர்குலைவுக் காரியங்கள் நிகழ, இடங் கொடுத்தவர்கள் என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். சென்றது செல்க. இனியேனும், கடவுளர் கோயில்கள் மக்கள் அறிவை வளர்க்கவும், அவர்களது அன்றாட வாழ்க்கையில் படிந்த துன்பத்தைப் போக்கி இன்பத்தைப் பெருக்கவும் பயன்பட வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டுவது என்ன?

கடவுளர் கோயில்களை எல்லாம் கலை வளர்க்கும் கல்லூரிகளாக்க வேண்டும்.

மண்ணுபரணம் பூணும் மக்கள் வாழும் தரித்திர நாட்டில், கடவுளர் சிலைகளுக்குப் பொன்னுபரணம் பூட்டும் புன்மையை ஒழிக்க வேண்டும்.

கூரை வேய்ந்த குடிசைக்கும் கதியற்ற மக்கள் வாழும் நாட்டில், கோபுரக் கலசங்களுக்குப் பொன் தகடு போடுவதைத் தடுக்க வேண்டும்.

சமயங்களின் சொத்துக்கள் அனைத்தையும் சமூக மக்கள் அனைவருக்கும் பயன்படப் பொது உடைமையாக்க வேண்டும்.

இயற்கைத் தெய்வத்தை, எல்லோரும் எவர்தயவுமின்றி தொழும் நெறி நாடெங்கும் பரவ வழி காணவேண்டும்.

இவைதான் பண்டைத் தமிழரின் சமயநெறி. வள்ளுவர், வள்ளலார் வழிவந்த நமக்கு அதுவே காலத்துக் கேற்ற நெறியுமாகும்.

சிவநெறி வளர்ச்சி

மா. இராசமாணிக்கனர், B.O.L ,M.O.L .L.T.

உலகத்து மிகப்பெரிய நாகரிகங்களில் எல்லாம் சிவநெறி காணப்படுகிறது. எகிப்தியர்-பாபிலோனியர்-அக்கேடியர்-அசீரியர் (அசுரர்) நாகரிகங்களில் லிங்க வழிபாடு-நந்திவழிபாடு முதலியன காணப்படுகின்றன. அண்மையில் நமது நாட்டில் வெளிப்பட்ட சிந்துவெளி நாகரிகப் புதை பொருள்களிலும் சிறியவும் பெரியவுமாகப் பல லிங்கங்கள் கிடைத்தன; ஒரு முத்திரையில் சிவனாது யோகநிலையை உணர்த்தும் உருவமும் காணப்பட்டது. இங்ஙனம் கிடைத்த பல சான்றுகளைக் கொண்டு, இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத் தலைவரான ஸர். ஜான் மார்ஷல் துரையவர்கள், "சிவநெறி மாக்கல் காலத்துக்கும் அப்பாற்பட்ட பழமை உடையதென்னலாம். அஃது இன்றளவும் தொடர்ந்து இருந்து வருகின்ற மிகப் பழைய நெறியாகும்" * என்று தாம் பதிப்பித்த சிந்து வெளி ஆராய்ச்சி நூல் முகவுரையிற் குறித்தார்கள். சிந்து வெளி நாகரிகத்தின் காலம் ஏறத்தாழக் கி. மு. 3250. கி. மு. 2750 என்னலாம்; அஃதாவது, இன்றைக்குச் சற்றேறக்குறைய 5000 ஆண்டுகட்கு முற்பட்டது ஆகலாம். இதனல் சிவநெறி குறைந்த அளவாகக் கணக்கிட்டுப்

---

* Among the many revelations that Mohenjo—Daro and Hararpa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivisim has a history going back to the chalco—lithic Age or perhaps even further still and it thus takes its place as the most ancient living faith in the world.

Mohenjc—Daro and the Indus Civilization

(Vol. 1, P. VII.)

பார்ப்பினும் 5000 ஆண்டுகள் பழமையுடைய தென்பதை உறுதியாகச் சொல்லலாம்; அதன் தோற்றம் வரையறுத்தல் இயலாது.

கோவில்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்நாட்டில் இருந்து வருகின்றன என்பதை வேதங்கள்--இதிகாசங்கள்--புராணங்கள்--உபநிஷத்துக்கள் முதலிய வடமொழி நூல்களாலும் ஆகம நூல்களாலும் நன்கறியலாம்.

சங்க காலம்: தொல்காப்பியத்தில் முருக வணக்கமும் கொற்றவை வணக்கமும், புறநானூறு முதலிய நூல்களில் சிவ வணக்கமும் தெளிவாகக் கூறப்பட்டிருத்தலால் சங்ககாலத்தில் சிவநெறி தமிழகத்தில் இருந்தது என்பது வெளியாம்.

> நீரும் நிலனும் தீயும் வளியும்
> ஆக விசும்போ டைந்துடன் இயற்றிய
> மழுவாள் நெடியோன் தலைவனாக
> மாசற விளங்கிய யாக்கையர்

எனவரும் மதுரைக்காஞ்சி அடிகளும்,

> நுதல்விழி நாட்டத்து
> இறையோன் முதலாப்
> பதிவாழ் சதுக்கத்துத்
> தெய்வ மீ ருக...

எனவரும் மணிமேகலை அடிகளும் சிவபெருமானது முதன்மையை வற்புறுத்தலைக் காணலாம். எனவே, சங்ககாலத்தில் தமிழகத்தில் சிவநெறி நன்னிலையில் இருந்தது-கோவில்களைப் பெற்றிருந்தது என்பன அறியக்கிடத்தல் காண்க.

நாயன்மார் காலம்: நாயன்மார் காலம் ஏறத்தாழக் கி. பி. 300--900 என்னலாம். அக்காலத்தில் சிவநெறி தமிழகத்தில் சமண--பௌத்தங்களை வென்று செழித்துப்பரவியது. திருநாவுக்கரசர் முதலிய தேவார ஆசிரியர்க்கு முன்னரே இருந்த (ஏறக்குறைய) 300 சிவன் கோவில்கள் பாடல் பெற்றுச் சிறப்புற்றன.

கோயில்களில் இசை——கூத்து——நாடகம் முதலியன வளர்க்கப் பட்டன. சமயத்தொடர்பான கல்வி மடங்களிற் புகட்டப்பட்டது. சமய ஆசிரியர்கள் தலங்கள் தோறும் தொண்டர் படையுடன் சென்று சமயப்பிரசாரம் செய்தனர். அக்காலத்தில் பெருங் கோயில்கள், இளங்கோயில்கள், மாடக் கோயில்கள் முதலிய பலவகைக் கோயில்கள் இந்நாட்டில் இருந்தன.

சோழப்பேரரசர் காலம்: விசயாலயன் மரபினரான பிற் காலச் சோழப் பேரரசர் காலத்தில் (கி.பி. 700——1300) சிவநெறி மிக உயர்ந்த நிலைமை அடைந்தது. முன்னர்ப் பாடல் பெற்ற கோவில்கள் அனைத்தும் கற்கோவில்களாக மாற்றப்பட்டன; நாயன்மார் உருவச் சிலைகள் எழுந்தருளப் பெற்றன; திங்கள் தோறும் விழாக்கள் நடைபெறவும் நாள் தோறும் பூசை நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெரும்பாலான கோவில்களில் திரு முறைகள் ஓதப்பட்டன. அக்காலத்தில் பிராமணர்——தேவரடியார்——குருடர் முதலியவரும் ஓதுவாராக இருந்தனர் என்பது முறையே திருத்தவத்துறை (லால் குடி), திருவொற்றியூர், திருஆமத்தூர்க் கல் வெட்டுகளால் அறியலாம். பெருங் கோவில்களை அடுத்து மடங்கள் உண்டாகிச் சமயக் கல்வி புகட்டி வந்தன. சில கோவில்களை அடுத்து கன்னி மாடங்கள் இருந்தன. அதன்கண் சைவப் பெண்மணிகள் இருந்து (சமணக் குரத்திமார் போல) சமயத் தொண்டாற்றி வந்தனர். கோவில்களில் இசை-நடனம்-நாடகம் வளர்ச்சி பெற்றன; புராண நூல்கள் படித்து பொதுமக்களுக்கு விளக்கப்பட்டன. திருநீரேில் புராணநூல் விரிக்கும் புரசை மாளிகை இருந்தது. திருப்பூந் துருத்திக் கோவிலில் இராஜராஜ நாடகம் நடிக்கப்பட்டது. திருவொற்றியூர்க் கோவிலில் ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம்படிக்கப் பட்டது. நாயன்மார் வரலாறுகள் ஓவியம்—(தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்கள் நினைக்கத்தக்கவை) சிற்பம்—(தாராசுரத்துச் சிற்பங்கள் இங்கு நினைக்கத்தக்கவை) விழாக்கள்- சொற்பொழிவுகள் வாயிலாக விளக்கம் பெற்றன; செப்புத்திருமேனிகள் செய்

விக்கப்பெற்றன. திருமுறைகள் பாதுகாக்கப்பட்டன; மூவர் தேவாரங்களும் செப்பேடுகளில் எழுதப்பட்டன. சுருங்கக் கூறின், சோழப்பேரரசர் சிவநெறியைத் தங்கள் உயிரெனக் கருதினர்; குடிகளும் அவ்வாறே கருதி வளர்த்தனர். அக்காலத் திற்றான் வரலாற்றுக் குறிப்புகள் என்னும் செங்கற்களைக் கொண்டு சைவசமயம் என்னும் நறுஞ்சாந்து பூசப்பெற்ற பேரின்ப மாளிகை என்னும் பெரிய புராணம் அமைப்புண்டது.

சோழர்க்குப்பின்: கி. பி. 1300-க்குப் பிறகு தமிழகம் முஸ்லிம் படையெடுப்புகட்கு இலக்காயது. மாலிக்காபூர் படையெடுப்பில் மதுரை மீனாட்சியம்மன் கோவில் கோபுரங்கள் பதினான்கும் பிரகாரங்கள் ஏழும் தரைமட்டமாயின. இங்ஙனம் அழிவுற்றக் கோவில்கள் பல. பின்னர் உண்டான விஜய நகர ஆட்சிக்காலத்தில் சைவமும் வைணவமும் ஓரளவு வளர்ச்சி பெற்றன. சைவ சித்தாந்த சாத்திரங்கள், ஸ்தல புராணங்கள், சைவ மடங்கள் முதலியவற்றைக் கொண்டு அக்காலத்தில் சைவம் ஓரளவு சிறப்புற்றிருந்தது என்பது அறியலாம்.

விஜயநகர வீழ்ச்சிக்குப் பிறகு கோல்கொண்டா, பீஜப்பூர்ச் சுல்தான்களின் கணக்கற்ற படையெடுப்புகளும், தமிழகத்தில் அரசர் இல்லாக் குறையும், அமைதி இன்மையும், பின்னர் ஆங்கிலேயர்-பிரெஞ்சியர்-நவாபுகள் போராட்டங்களும் பிறவும் சிவநெறி-திருமால் நெறிகளைத் தலைதடுமாறச் செய்தன. இந்த 200-250 வருடகால அளவில் நாயன்மாரும் பிற்காலச் சைவரும் அமைத்த சிவநெறிக்கட்டுப்பாடு இருந்த இடம் தெரியாது மறைந்தது; திருப்பதிகங்கள் மறக்கப்பட்டன; விஜயநகர ஆட்சி காலத்தில் கருநாடக இசை பரவித் தமிழ் இசையை அடக்கி விட்டது. தமிழ் இசை-கூத்து-நாடகம் முதலியன மறைந்தன. சைவத்தை வளர்க்கத் தங்கள் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்த தேவரடியார், அரசுநிலையும் கோவில் ஆட்சி நிலையும் குழம்பி மாறுபட்ட காரணத்தால், தங்கள் தூய வாழ்விலிருந்து இழிந்து கோவில் தொடர்பான ஆடவர்களைச் சார்ந்து வாழலாயினர்

அவர்களுடன் ஆடல்பாடல் மகளிரும் கலந்தனர். இங்ஙனம் சிவநெறிநிலை இழிவுற்றமைக்கு தென் இந்திய வரலாறே காரணமாகும். இந்த நிலையில் ஆங்கில ஆட்சி தோற்றமெடுத்தது.

இன்றைய நிலைமை: வெள்ளை அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையில் நாட்டு சமயங்கள் உயிர்பெற்றன. ஆனால், அவை பெயரளவில் இருக்கின்றன என்று கூறமுடியாது. இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகம் ஏற்பட்ட பிறகு கோவில்கள் பார்க்கத்தக்க நிலையில் காட்சி அளிக்கின்றன. ஆயினும், போதிய கல்வியறிவும் சமயப்பற்றும் நாட்டு வரலாறும் கலையுணர்ச்சியும் அற்றவருட் பெரும்பாலரே கோவில் அதிகாரிகளாக நாடெங்கும் பரவி இருத்தலால் கோவில் ஆட்சி செவ்வனே நடைபெறவில்லை — சிவநெறித்தொண்டு சிறப்புற வழியில்லை— என்று கூறுதல் தவருகாது. இக்குறைகள் நீங்கவழி உண்டா?

தமிழ்நாட்டில் உள்ள சைவப்புலவர்கள், சைவசமயத்தைச் சேர்ந்த பெருமக்கள், உத்தியோகஸ்தர்களைக் கொண்ட "சிவநெறிக் கழகம்" ஒன்று அமைக்கப்பட வேண்டும். அது சிவநெறி நலனுக்காக வன்மையுடன் கட்டுப்பாடாக வேலை செய்வதாக அமைதல் வேண்டும்.

அச்சிவநெறிக் கழகச் சார்பில் "சிவநெறி நூற்பதிப்பகம்" ஒன்று தக்க முதற்பொருள்மீது அமைவுறுதல் வேண்டும்.

அப்பதிப்பகத்தின் வழியாகச் சமய நூல்கள் முதலியவற்றைத் தக்க வரலாற்றுக் குறிப்புகளுடன் வெளியிட ஏற்பாடு செய்யவேண்டும்.

புதைபொருள் ஆராய்ச்சியிலும், பிறதுறை ஆராய்ச்சியிலும் வெளிப்போந்த ஆராய்ச்சி நூல்களிலிருந்து சமய உண்மைகளைத் தொகுத்து "உலகச் சிவநெறி வரலாற்றை" நூல் வாயிலாக வெளிப்படுத்த வேண்டும்.

திருமுறைகள் முதலிய சமயநூல்களை இக்கால வரலாற்று விஞ்ஞான—இலக்கிய ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து "சமய ஆராய்ச்சி நூல்"களை வெளியிடுதல் வேண்டும்.

சிவநெறி நூல்கள் அனைத்தும் பொதுமக்கள் படித்துணரத் தக்க வகையில் எளிய செந்தமிழ் நடையில் சுருங்கிய அளவில் வெளியிடவேண்டும். கிறிஸ்தவ இலக்கியக் கழகத்தாரும், பைபிள் கழகத்தாரும் மேற்கொண்டுள்ள முறையை நாம் பின் பற்றவேண்டும்.

இந்நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் வெளிவருதல் வேண்டும். ஆங்கிலம் வல்ல சமயப் பெரியார்களை மேனாடுகட்கு அனுப்பிச் சமய உண்மைகளை உலகறியச் செய்யவேண்டும். இந்து சமய தத்துவத்தை உலகறியச் செய்த சர். ச. இராதாகிருஷ்ணன் சைவ சித்தாந்த உண்மைகளை நன்கு அறிந்தவராகத் தெரியவில்லை. அதற்குச் சைவ சித்தாந்தம் பற்றிப் போதிய ஆங்கில நூற்கள் இல்லாமையும், பிரசாரம் இல்லாமையுமே சிறந்த காரணங்களாகும். இக்குறை விரைவில் நீக்கப்பட வேண்டுவதாகும்.

சமயாசிரியர் அருள் உரைகளைத் தொகுத்துச் சிறு சிறு நூல்களாக வெளியிடல் வேண்டும். நாள்தோறும் வழிபாடு செய்வதற்குரிய பாக்களைத் தொகுத்துச் சிறு நூலாக வெளியிட வேண்டும். இங்ஙனம் சிறு நூல்கள் பல வெளிவரல் வேண்டும்.

ஜில்லாவாரியாக அல்லது நாட்டுவாரியாக 'சிவஸ்தல மஞ்சரி' போன்ற—ஆனால் தக்க படங்களுடன் கோவில்களைப் பற்றிய பல விவரங்களுடன் நூல்கள் வெளிவரல் வேண்டும். தல யாத்திரைப் படவிளக்கங்கள் ஜில்லாவாரியாக வெளி வருதல் நல்லது.

சமய இலக்கிய ஆராய்ச்சிநூல் எழுதுபவர்க்குப் பரிசு வழங்கி ஊக்கி, அந்நூலைக் கழகத்தார் அச்சிடவேண்டும்.

ஒவ்வொரு கோவில் வரலாற்று நூல் வெளியிடவேண்டும். அம்முறையில் சில கோவில் நூல்கள் வந்தன. அவை போதா. கோவிற் கல்வெட்டுகள் அனைத்தும் அந்நூலில் இடம்பெற வேண்டும். அவை பொதுமக்கட்குப் பண்டைகாலத் தமிழ்நாட்டு வரலாற்றின் பல பகுதிகளை விளக்க உதவிசெய்யும்; சமயத்தினிடத்தும் மிகுந்த பற்றை உண்டாக்கும். இதற்குக் கல்வெட்டு

பயிற்சி மிக்குடைய பெருமக்களைக் கழக ஊழியராக அமர்த்தி வேலையில் ஈடுபடுத்த வேண்டும்.

பண்டை காலத்தில் கோவில்களில் இசை அரங்கு, நடன அரங்கு, நாடக அரங்குகள் இருந்தன. பொதுமக்கள் இக் கலைகளை வளர்க்கக் கோவில்களைப் பயன்படுத்தினர்கள். ஊராட்சி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. மருத்துவக்கூடம் கோவிலில் இருந்தது. சமயப்பள்ளி கோவிலில் இடம்பெற்றது. சமயச் சொற்பொழிவுகள் கோவிலில் இடம் பெற்றன. இவற்ருல் பொதுமக்கட்கும் கோவில்கட்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. ஆயின் இன்று அத்தொடர்பு இல்லை. படமாடும் கோவில்கட்கும் நடமாடும் கோவில்கட்கும் தொடர்பு இருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஊர் கோவிலில் அவ்வூர் மக்கள் நல்ல காரியங்கட்காகக் கூட வாய்ப்பு ஏற்பட வேண்டும்; ஊர்ச் சபையார் அங்குக்கூடி ஊராட்சி முறைகளைக் கவனித்தல் வேண்டும்; ஊரில் நடைபெறும் சன்மார்க்க சொற்பொழிவுகள், இசை அரங்குகள், சமயத்தொடர்பான நாடகங்கள் இவை இடம் பெறல் வேண்டும். பிரகாரங்களில் நூல் நிலையம்-படிப்பகம் (வாசகசாலை) அமைதல் நல்லதே. இவற்றினுல் ஊர்மக்கட்கும் கோவில்கட்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படும். பொது மக்களது வரிப்பணத்தால் கட்டப்பட்ட கோவில்கள் பொது மக்களுக்கே பல வகையிலும் பயன்படவேண்டும்.

கோவில்களில் ஓதுவார் நியமனம் பெறல் வேண்டும். அவர் காலை மாலைகளில் ஒவ்வொரு மணி நேரமேனும் திருப்பதிகங்களைப் பண்ணோடும் பொருள் உணர்ச்சியோடும் பாடவேண்டும். பிரார்த்தனைக்குரிய திருப்பதிகங்களுடன் அத்தலத் திருப்பதிகங்களையும் அச்சிட்டு ஊரார்க்கு வழங்குதல் வேண்டும். தேவாரப் பள்ளி கோவில்தோறும் ஏற்படுதல் நல்லது. தமிழ் இசை மீண்டும் உயிர் பெறவேண்டுமாயின் இம்முறையை உடனே மேற்கொள்ளுதல் வேண்டும்.

மக்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சிவநெறித் தொடர்பான பெயர்களையும் நல்ல தமிழ்ப் பெயர்களையுமே இடவேண்டும் என்று உறுதி கொள்ளவேண்டும். அப்பெயர்களால் சமய உணர்ச்சி நாட்டில் ஓர் அளவு பரவ வழியுண்டு. நாயன்மார் பெயர்களைப் பல்லவர் காலத்தமிழரும் பிற்காலச் சோழர் காலத்துத் தமிழரும் வைத்து வழங்கினர் என்பதற்குக் கல்வெட்டுகளில் பல சான்றுகள் காட்டலாம். அவர்கள் என் அம்முறையைக் கையாண்டனர்? எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

காலத்துக்கேற்றபடி இன்றியமையாத சமயக்கொள்கைகளை வரையறை செய்து, வழிபாட்டு முறைகளை ஒழுங்கு செய்து அவற்றைச் சிறு நூலாக அச்சிட்டு வழங்கவேண்டும்; பொது மக்களிடம் அவை பரவத்தக்கவாறு சிறந்த சொற்பொழிவாளர் சிலரை அமர்த்தி இத்தொண்டை செய்வித்தல் வேண்டும். அச்சொற்பொழிவாளருள் ஒருவர் அல்லது இருவர் பெண்பாலராக இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டுத் தாய்மாரிடம் சமயஉணர்ச்சி கருக்கொள்ளுதலே இன்றியமையாதது. சமயச்சீர்திருத்த மாநாடுகள் ஆங்காங்கு நடைபெறவேண்டும்.

மாநாடுகள் தீர்மானங்களை யோசித்துச் செய்தல் வேண்டும்; செய்த பிறகு அவற்றை நடைமுறையில் கொணர அரும்பாடுபடுதல் வேண்டும்.

மாநாடுகளில் சமயப் பொருட்காட்சிசாலை இன்றியமையாததாகும். நாயன்மார் திருவுருவப் படிவங்கள், செப்புத் திருமேனிகள், பண்டைக்கால ஓவியங்கள், சிற்பங்கள், சிறப்புப்பெற்ற பெரிய கோவிற் புகைப்படங்கள், சமய வெளியீடுகள், தலயாத்திரைப் படங்கள், கோவிற் கல்வெட்டு மாதிரிகள், கோவிற் கட்டடக்கலை விவரங்களை உணர்த்தும் படங்கள் முதலியன பொருட் காட்சிச்சாலையில் இடம் பெறல்வேண்டும். கண்ணால் பார்ப்பது உள்ளத்தில் நன்கு பதியும். ஆதலின் இக்காட்சிகள் வைப்பது உண்மையான சமயத்தொண்டாகும்.

மக்கள் சென்னையிலுள்ள பொருட்காட்சிச் சாலைக்கும் அது போன்ற காட்சிச் சாலைகட்கும் சென்று சமயத் தொடர்பான

பொருள்களைக் கண்டு அறிவு பெறவேண்டும். பொது மக்களுக்கு நமது கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முதலியவற்றைப் பற்றிய உணர்ச்சி வரின் சமயம் தானாகவே வளர்ச்சி பெற்று விடும். பொதுமக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுமாயின் கோவில்கள் அழியா; சமயமும் வளர்ச்சி பெறும்; எல்லாச் சமயக்கலைகளும் பண்டுபோல மேனிலையை அடையும்.

நாயன்மார் காலத்தில் வழக்கிலிருந்த தலப்பெயர்கள் இன்று வழக்கிழந்து விட்டன. அவை தமிழ்ப்பெயர்கள். அவையே திருப்பதிகங்களில் காணப்படுகின்றன. அவற்றைப் படிப்பவர் பலருக்கு இன்று திருமறைக்காடு, திருமுது குன்றம் முதலியன இன்னவை என்று தெரியா. அவை முறையே இன்று வேதாரண்யம், விருத்தாசலம் என்ற வேறு போர்வைக்குள் இருக்கின்றன. இவ்விழி நிலை மாறவேண்டும்.

முடிவுரை : தமிழ்நாட்டு வரலாறு வடஇந்திய வரலாற்றைப் போன்றதன்று. தமிழகம் கி. பி. 13-ஆம் நூற்றுண்டு முடியத் தனி நாகரிகத்தை வளமுற வளர்த்தது. நம்முன்னோர் வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கோவில்களைக் கட்டித் தங்கள் நாகரிகக் கலைகளை வளர்த்தனர்; இன்று நாம் பெருமை படுத்திக்கொள்ளும் நாகரிகத்திற்கு அவர்களே பொறுப்பாளிகள்; நாம் அல்லோம். 'தமிழர் நாகரிக இனத்தவர்; இணையற்ற கட்டடக்கலையில் வல்லவர்' என்று மேனுட்டார் நம்மைப் புகழக் காரணமாக இருப்பவை—தம் வரலாற்றைக் கல்வெட்டுகள் வாயிலாக உணர்த்திப் புன்முறுவலோடு நம்மைப் பார்த்து நிற்கும் திருக்கோவில்களே ஆகும். அவையே இன்று நமது பழைய நாகரிகத்தின் உயிர்நாடியாக இருப்பவை; மூடர்க்கும் உணர்ச்சி ஊட்டும் காட்சிப்பொருள்கள். அவை, பொதுமக்கள் உள்ளங்களில் இடம்பெறச் செய்யவேண்டும்; அவற்றில் நாள்தோறும் உலக வாழ்க்கைக்குரிய நடவடிக்கைகளும் ஆன்ம உணர்ச்சிக்குரிய செயல்களும் நடைபெற வேண்டும். அந்நிலையிற்றான் சமய உணர்ச்சியும் சமுதாய உணர்ச்சியும் மக்கள் உள்ளத்தில் தோன்றி நன்முக வளரும்.

கோயில் வேண்டாவோ !

பண்டித வி. நடேசன்.

உலகில் உத்தமர்கள் எக்காரியத்தை ஆரம்பித்தாலும் தமக்குரிய வழிபடு கடவுளையோ ஏற்புடை கடவுளையோ நினைத்தும் துதித்தும் தொடங்குகின்றனர்; தினசரி வாழ்க்கையிலும் கடவுள் வழிபாட்டினை முதற்கடமையாய்ப் பூண்டுள்ளனர். பிறந்த நாள் விழா முதல் இறந்தநாள் விழாவரை கடவுளை முன்னிட்டே முயல்கின்றனர். திருவருள் முன்னிட்டு முடியாச் செயலில்லை. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பினையே தோன்றாத் துணையாய்த் தொழிலை மேற்கொள்கின்றனர். பெரும்புலவனும், பேரறிஞனும், கவிஞனும், கலைஞனும் கற்றளி தொழுதே வாழ்ந்து வருகின்றனர். தெய்வ பக்தியே நன்னெறிக்கும் முத்திக்கும் வித்தாகும். 'ஆதிபகவன் முதற்றே உலகு' என ஆன்றோர் ஆய்ந்துணர்ந்தனர். கற்றதனாலாய பயன் கடவுளைத் தொழுகை எனக் கண்டனர்.

இஃது அறியாச் சிறுவர், 'பல்லாயிரக் கணக்கில் பணத்தைச் செலவிட்டுச் செய்யும் கோயிலில் கருங்கல்லல்லவோ கிடக்கக் காண்கின்றோம்' என்ப. இளமையிற் கல்லாது முதுமையில் மண்ணாகும் மாக்களே அவ்வாறு வினவும். நம் முன்னோர் மூதறிவுடையோர்; அநுபவங் கண்டோர். அறிவிற் கண்டதை அநுபவங் கண்டே பிறர்க்குச் சொல்லுவோர், உலகில் இந்தியரைப்போன்று, அதுவும் தமிழரைப் போன்று, பெரும் ஞானிகள் வேறு எத்தேசத்திலும் இல்லை. வீரத்திலும், தொழிலிலும், அறிவிலும், இசையிலும், ஆட்சியிலும் சிறப்புற்றவர் இந்தியர்; இன்று சிதைந்துள்ளனர். ஆனால் இச் சிறப்புக்குத் தலையாய காரணம் கோயில் எனின் மிகையாகாது.

மூத்தோர் சொல் வார்த்தை யமுதம், எனத்தமிழகம் போற்ற வேண்டும். இளஞ்சிறுர் தம்மைப் பெரியார் என எண்ணி இறுமாந்து அலைகின்றனர். உண்மைப்பெரியாரை எள்ளி நகையாடுகின்றனர். இது புன்றலையின் கொடுமை! இன்று சிறியோர் பெரியோரை மூடரென்று நினைக்கின்றனர்; ஆனல் பெரியோர்க்குச் சிறியோர் மூடரென்று நன்கு தெரியும். Youngmen think old men are fools but old men knew, youngmen, are fools. இச்சிறுவர் மலிந்த நன்னுட்டில் திருகோயிற் பெருமை திகழுமாறு தெரியேன். நாடு நன்னிலையடைய நம் கோயில் திருத்தமுறல் வேண்டும். கோயிற் சீர்திருத்தமே நாடு சீர்திருத்தமாம். அறம் வளர்க்கும் அறநிலையங்களை அரசு அனுதினமும் கவனிக்க வேண்டும். இன்று அஃதே அரசின் முதற் கடமையாம்.

காணமுடியாக் கடவுளைத்தொழுதல் மக்கட்கடன். அக்கடவுளை மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் வழிபடல் வேண்டும். அன்பும் தொண்டும் ஆண்டவன் விரும்புபவை. அன்பும் அருளும் இறையின் குணமாம். 'ஆண்டவன் குணக்கடல் ஆடுதி நன்றரோ' என்றுர் கம்பர். ஆண்டவனின் கல்யாண குணங்களில் ஆழ்ந்தவரன்றே ஆழ்வார் எனப்படுவோர். 'அன்பே சிவம்' என்றுர் திருமூலர். அன்பால் வழிபாடு சிறப்புறும். உடலால் தொழத்தொழ அன்பு மிகும். அன்பு அதிகரிக்க வாயால் வாழ்த்து மிகும். வாழ்த்து மிகமிக மனத்தால் வழிபாடு மலியும். தியானம் வலிபெறும். உடலால் வழிபடுதலே தெய்வ பக்திக்கு இன்றியமையாதது. ஏனைய வழிபாடுகளைவிட உடம்பு வணக்கமே எல்லோராலும் முடியவல்லது. எனவே, பண்டிதர்க்கும் பாமரர்க்கும் ஆலய வழிபாடு அவசியம்.

கற்றதனுலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றுள்தொழார் எனின்
கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

எனக் கூறும் திருவள்ளுவப் பயனை நோக்குங்கால், நம் வள்ளுவர் ஆலய வழிபாட்டினையும் உருவ வழிபாட்டினையும் உடலால் செய்யும் வணக்கத்தையும் வலியுறுத்தியுள்ளார் என்பது தெளிவு. தாள் உள்ள இறைக்குத் தலையும் உள்ளதன்றோ! உருவமில்லாத ஒன்றுக்குக் கை கால் தலை கூறமுடியாது. உருவ வழிபாட்டை மனத்திற் கொண்டே வள்ளுவர் 'தாளை வணங்காத் தலை' என்றார்.

"ஒரு காலும் திருக்கோயில்சூழாராகில்—அளியற்றார்
பிறந்தவாறு ஏதோ என்னின்
பெருநோய்கள் மிக நலியப்பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"

"நிலைபெறுமாறு எண்ணுதியே நெஞ்சே! நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு"

எனத் திருநாவுக்கரசர் கூறுவன சிந்திக்கத்தக்கன. உழவாரப் படையாளி எனக் காரணக்குறி பூண்டோர் இவ்வடிகளே. சைவக் குரவருள் இவரே அநுபவம் மிக்கவர். எண்பத்தோராண்டு வாழ்ந்தவர். அவர் தம் உடலால் செய்த வழிபாட்டைச் சிவனே புகழ்ந்து, அவரை "என்னப்பன்" என அழைத்தனர் என்ப. எது எதுவாயினும் உடலால் செய்யும் வழிபாடு மிக மேலானது என்பது வெள்ளிடைமலை.

சிந்தைக் கெட்டாச் சிவனுக்கு வடிவமும் கோயிலும் சமைப்பானேன் எனலாம். உருவம் அமைத்தது அழகை உணரவும் அவனை வழி பட்டு உய்யவுமாம். அரன் கோயில் வலம் வரவே நாம் கால் பெற்றுள்ளோம் என்றார் அப்பர் சுவாமிகள். இயற்கைக் குயிராய் இலகும் இறையை உருவமாக்கினர். அவ்வுருவ வழிபாட்டிற்கு இடம் உண்டாக்கினர். அஃதே ஆலயம். 'கோயில் சுடுகாடு' என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். இதைக்கொண்டு முதன் முதல் ஆலயம், செத்தாரைப் புதைத்த இடத்தில் நடுகல்லாக முளைத்து வீரக்கல்லாக மாறி கோயிலாக விளங்குகின்றது என்ப. பெருந்தலைவர்களைத் தினமும் நினைக்கத் தனிப்பட்டதோரிடத்தில் புதைத்துக்

கல்லெடுத்திருக்கலாம். இதுவே கற்றளியின் மூலம் எனலும் பொருத்தமே.

மலைதோன்றி மண்தோன்றாக் காலத்தவர் முருகு பூசையே கண்டனர். இயற்கையழகிலீடுபட்டு இன்பம் விழைந்தனர். இறையருளே வேண்டினர். வனங்களில் முனிவர்கள் தம் தெய்வங்களைத் தொழுது வதிந்தனர். இவ்வனங்களையழித்து நாடு கண்ட மன்னர்கள் முனிபுங்கவர் வணங்கிய இடத்தைப் புண்ணியஸ்தலமாக்கினர். பெருமாடமும் சமைத்தனர். காட்டையழித்து நாடாக்குங்கால் கோயிலமைத்தே ஏனைய திட்டங்களை வகுத்தனர். பலர் கூடி வாழுமிடங்களில் தெய்வத்தையே தலைமையாக்கி வழிபாடு செய்து வாழ்ந்தனர். நாளடைவில் மக்களின் ஒற்றுமையால் நகரங்களும் ஆலயங்களும் பெருவாரியாய்த் தோன்றின. கோயில் சமைத்தே அதற்குரிய கோட்டை, கொத்தளம், கிடங்கு முதலியன கட்டினர். பாதுகாவலுக்குரிய படைகளாகிய ஆயுதங்களையும் கருவிகளையும் பொறிகளையும் வைத்துள்ள இடத்தையே 'படைவீடு' என்றனர். திருமுருகன் திருத்தளிகளை 'ஆறுபடைவீடு' என்றனர். கற்றளிகளைக் காக்கவும் கண்காணிக்கவும் அக்காலத்து அரசன் விழைந்தது போல் இக்காலத்தும் அரசு கோயில்களைப் போற்றல் கடனாகும்.

ஊர்த்தலைவனும் அரசன் வாழுமிடம் அரண்மனை. ஆசிரியர் வதியுமிடம் ஆஸ்ரமம். ஆண்டவன் எழுந்தருளுமிடம் ஆலயம் அல்லது கோயில் எனப்படும். இந்த இடமே எல்லாச் சிறப்புக்குமுரியது. கோ = தலைவன்; இல் = இருக்குமிடம். தலைவனது இடம் அல்லது தலைமையால் சிறந்த இடம் எனப்பொருள் தரும். உலகத் தலைவனை இருத்த அவனுடைய தகுதிக்கேற்ப வானளாவ கோயில் கட்டினர். பழந்தமிழகத்தில் திருக்கோயில்களையே சிறந்த நிலையங்களாக நிறுவினர். மலைக்கோயில், பாறைக்கோயில், குகைக்கோயில், மாடக்கோயில், ஷண்மங்கல க்ஷேத்திரம், கடல்மல்லை எனப் பல்வேறு கோயில்கள் உண்டு. விமானம், மன்று, சபை, மண்டபம்,

கோபுரம், திருவுண்ணாழி, திருமதில், பள்ளி முதலியன கோயி லுறுப்புக்கள்.

"முக்கட் செல்வர் நகர் வலம் வரற்கே" என்று புறப்பாட்டிலும் "பொன்னகர்க் கோயில், வளநகர்" என்று சிந்தாமணியிலும் வரும் தொடர்களை நோக்குழி நகர்க்குக் கோயில் எனவும் பொருள் உண்டு. கோயில் எனுஞ்சொல் அரண்மனையையும் குறிக்கும். ஊர் தலைவன் வாழுமிடமே மிக்க பாதுகாப்புக் குரியது. அரண்மனையில் தேவாலயம் சமைத்தல் வழக்கம். மக்கள் வாழும் மனை கட்டுதலிலும் பூசையறை தனியே கட்டுதல் மனையறத்தின் மரபும் மாண்புமாம். இராசமாபுரத்தின் அரண்மனையில் ஸ்ரீ கோயில் உண்டு என்றும் பகைவர் மனையோராய்ப் பிடித்து வரப்பட்ட மகளிர் கொல்லப்படா ராதலின் அவர்களைக்கொண்டு கோயிற் காரியங்கள் செய்வித்தல் மரபு என்றும் ஜீவக சிந்தாமணி கூறுகின்றது.

> "திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
> திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
> ஊரல்ல அடவி காடே"
>
> "ஊரானோர் தேவகுலம்"
>
> "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா"

எனும் வாசகங்கள் கோயில் முக்கியத்தைக் காண்பிக்கின்றன. சீரும் சிறப்பு முடைய திருக்கோயில்களைக் கல்லார் வெறுங் கருங்கற் கோயிலாகவே காண்கின்றனர். கற்றளிகளைப் படைவீரர் கொண்டு காக்கக் காரணம் காணவேண்டும். கற்றளி யெழுச்சி கல்லார்க்கே, என்பது ஓர் ஆராய்ச்சிக் குரியதே.

மதுரை மாநகரம் தாமரைப் பூவைப் போன்ற சிறந்த ஊர்; அப்பூவின் அகவிதழ் புறவிதழ் பொன்றன அவ்வூரின் தெருக்கள்; அவ்விதழ்களின் நடுவணுள்ள உட்கொட்டையைப் போன்றது சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயில்; அக் கொட்டையைச் சூழ்ந்துள்ள மகரந்தப்பொடி போல் தமிழ் மக்கள் வாழ்ந்தனர் எனும் பொருள் படக் கீழ்காணும் பரிபாடல் விளங்குகிறது.

"பூவொடு புரையும் சீரூர்;பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்"

இப்பரிபாடல் நாட்டில் நகரமும் கோயிலும் சமைக்கும் முன்னாள் வழக்கம் தெரிவிக்கின்றது. ஆதியில் நகரங்களையும் ஆலயங்களையும் மலைகளுக்கிடையிலும் மலைமேலும் முறையே கண்டனர் மக்கள். சிறந்த ஊரை நாடு என்றும் நகரம் என்றும் அழைத்தது போல் சிதம்பரத்தைக் கோயில் என்றும் தஞ்சையைப் பெருங் கோயில் என்றும் மக்கள் அழைத்தனர். நகரம் என்பது காரணப் பெயர். நகத்தால் சூழப்பட்டது நகரம்; நகம்-மலை. மாற்றார் எளிதில் கைப்பற்ற முடியாத செங்குன்றுகளுக்கிடையே நகரம் விளங்கிற்று. இவண் வாழ்ந்தோரே மிக்க நாகரிகம் பெற்றோர். நகரச்சம்பந்த முடையதே நாகரிகம். நகரத்தார் அன்பாளராய், அருளாளராய், நுண்ணறிவினராய், ஆண்மையாளராய், திகழவே பண்டையில் நகரம் அமைந்தது. முறைப்படி அமைந்த ஊரும் கோயிலும் பேருக்கும் புகழுக்குமிடமாய் விளங்கின.

"ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப்பார்த்து உவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார்"—என்றும்,

"உலகனைத்தும் தான் வாட வாடாத தன்மைத்தே
தென்னவன் நான் மாடக் கூடல் நகர்"—என்றும்.

கூறும் பரிபாடலின் உண்மை திருக்கோயிற் சிற்பினை எடுத்து இயம்புகின்றது. கோயில்களால் தெய்வபக்தி நாட்டில் வளர்ந்தது. அறிவு வளர வளர நாளடைவில் மக்களின் மனங்கவர ஆலயங்களைப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு இருப்பிடமாக்கினர் அறிஞர். இசை வல்லுநர் இசைத்தனர்; ஆடல் வல்லுநர் ஆடினர்; புலவர் புராணம் சொற்றனர்; முத்தமிழ்க்கும் சங்கமாயது மாடக்கோயில்கள். யவன தச்சரும், விஸ்வகர்மரும், மகதவினைஞரும், மராட்டியக்கொல்லரும்

அவந்தித் தொழிலாளரும், ஏனைய சிற்பியரும் தத்தம் திறமையைக் காண்பித்துக் கோயிலைக் கவர்ச்சியுறச் செய்தனர். அவ்வழகு காண மக்கள் திரண்டனர். கோயிலே ராஜ சமஸ்தானம் போல் தலைமை பெற்றது. ஊரின் பொக்கிஷ சாலைக் கோயிலில் வைத்துக் காக்கப் பட்டது. ஊர் பொதுச் சபையும் கிராமப் பஞ்சாயத்தும் நியாய ஸ்தலமும் கோயிலைச் சார்ந்தே இருந்தன. எல்லாமறியும் இறையின் முன்னிலையில் பொய்யாமை வேண்டுமல்லவா! நிலத்தை விற்றலும் வாங்கலும் கோயிலில் நடைபெற்றன. சபைகளின் தீர்ப்பையும் நிகழ்ச்சிகளையும் கல்வெட்டுகளிற் பொறித்து யாவருமறிய கோயிலிற் சேமித்து வைத்தனர். எனவே நடுநிலைமைக்கும் பொய்யாமைக்கும் தயாகமாயது கோயில். கோயில் ஊரின் ஒற்றுமைக்கும் அடிகோலியது.

கோயிலில் நடைபெறும் உற்சவாதிகள் ஊரின் ஒற்றுமையைக் காண்பிக்கும். 'ஒன்று பட்டாலுண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கில் நம் அனைவர்க்கும் தாழ்வே'என்பதை யுணர்ந்தோர் கோயில் சமைத்து அறம் வளர்த்தனர். நைமித்திகமாகியதும் ஆகமமாகியது மாகிய விழாக்கள் ஊரினர் அனைவரும் ஒரு சேரக் கலந்துகளிப்பதற்குரியன. சொல்லற்று மனமொன்றித் திருவிழாவில் கலக்கின்றனர் ஊரார். திருவிழாக் காலங்களில் ஊரின் ஒற்றுமை வெளிப்படும். ஸ்தலத்தின் மகிமைக் கேற்பக் கூட்டம் சேரும். சிற்றூர் விழாவில் அவ்வூரே கூடும்; பேரூர் விழாவில் பல சிற்றூரினர் கூடுவர். சில விழாக்களில் நாடே கூடும். அரசதானி விழாவில் அரசனது ஆளுகையிலுள்ள இடமெல்லாம் கூடும்.

மதுரைக்குச் சிவராஜதானிபுரம் எனும் பெயருண்டு. ஆண்டு நடைபெறும் விழாக்களுக்கு எல்லாவூர் மக்களும் கூடுவர். ஆசிய மாநாடு போல் பல தேசத்தினர் கூடிய விழாக்களும் உண்டு. பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் மாசிமகம் எடுத்துக் காட்டாகும். காசியையும் கயாவையும் பிரயாகையையும் காண அயல் நாட்டினர் நம் நாட்டிற்கு வருகின்றனர்கள். பல தேசங்கள் பக்தியால் கோயிலிற் கூடின எனின் மிகையாகாது.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய கோயில்கள் வீற்றிருந்தன. தொழிலாளிகளுக்கும் பிறர்க்கும் வேலை கொடுப்பதற்குக் கோயில்கள் விரிவு படுத்தப்பட்டன. பழுதுபார்க்க வேலையாட்களிருந்தனர். கோயில், சிற்பிகளுக்குப் பிழைப்பு தந்தது; நாட்டைச் சிறப்புறச் செய்தது; ஏழைமக்களுக்கும் உடற்குறையுற்றோர்க்கும் இலவசவுணவு தந்தது. ஒரு கோயிலையடுத்து குருக்கள், பஞ்ச கம்மியர், கணக்கர், கணக்காயர், பூத்தொடுப்போர், வாரியர், ஓதுவார், பண்டாரத்தார், வாத்தியக்காரர், பறையர் முதலியோர் பிழைத்தனர். கோயிலால் பல கவிஞர் தோன்றினர். கவிஞரால் கலைத்திறமை உயர்ந்தது. ஓவியக்கலையும் சித்திரக்கலையும் ஓங்கியது. கலையால் பல பள்ளிகள் தோன்றின. பள்ளியால் பல மாணவர்கள் உண்டி பெற்றுக் கல்வி பெற்றனர். எனவே கோயில் கல்விக்குத் தாயகம் என்பது கண்கூடு.

பல சமய மடங்களும் வித்தைக்கே வெளியாயின. ஊராரின் மொழிகளைக்கற்று மக்களைத்திருத்தவே மடாதிபதிகள் ஏற்படுத்தப் பட்டனர். ஆதி குமரகுருபர சுவாமிகள் கண்ட படங்கள் ஆற்றும் தொண்டினையே எல்லா மடங்களுக்கும் எடுத்துக் காட்டாக்கலாம். காசிமடம் செய்யுந் தொண்டினை யான் நேரில் கண்டுள்ளேன். அது போற்றற்குரியதே. மக்களுக்கு ஆவன புரியவும் அறியாமை போக்கவும் தூய வாழ்க்கை மேற் கொண்டு பிறர்க்கு எடுத்துக் காட்டாக விளங்கவும் மடாதிபதிகளுக்கு மடங்கட்டித் தந்தனர் மக்கள்.

மதபோதனைக் குரிய மடம் பிறபோதனைக்காகாது. கோயில் நிதியும் முன்னையோர் எண்ணத்தைப் பூர்த்திசெய்யவே பயன் படவேண்டும். முன்னையோர் முறையில் நிற்றல் முறைமையுமாம். கோயில் நிதியைக் கொடுத்த அடியார்களின் எண்ணத்திற்கு மாறாக செலவிடுதல் சத்தியம் தவறியதற்குச் சான்றாகும். நிதி வைத்தவரின் தருமங்களை மக்கள் இடைவிடாது செய்து வருகின்றனரா என்பதைக் கவனித்துத் தவறியவரைத் தண்டித்தல் இன்றைய அரசின் கடமையாம்.

இசை, சிற்பம், சித்திரம், ஓவியம், கட்டடம், கல்வி என்பன நாகரிகச் சின்னங்கள். இவை வளர கோயில் மிக முக்கியம் பெரியோர்களால் பாடப்பெற்ற ஊர்களைப் பாடல்பெற்ற ஸ்தலம் என்றும் மங்களாசாஸனம் பெற்ற ஸ்தலமென்றும் கூறுப. மக்கள்

போற்றும் அத்தலங்களிலுள்ள இறைக்கு நடக்க வேண்டிய நைமித்திகாகமங்கள் எக்காலத்தும் முட்டின்றி நடைபெற தேவ போகங்களும் தேவதானங்களும் செல்வர்களும் ஏழைகளும் வழங்கினர். இத்தேவ தானங்களை அழித்தல் இயற்கையன்று.

கோயிலைச் சார்ந்து ஊருணி, பசுமடம், வைத்தியசாலை, பூங்கா முதலியவை பாதுகாவலிலிருந்தன. தூய்மை போற்றப் பட்டது. திருக்குளத்தின் பழைய நீர் செல்ல வடிகாலும், புதுநீர் புக பாய்காலும் வெட்டினர். சுத்தத்திற்குத் தாமரையும் மீன்களும் குளத்தில் வளர்க்கப்பட்டன. பல இடங்களில் பல நீருண்டு. நிலத்தால் நீர் திரிதல் இயற்கை. பிணியகற்றும் திருக்குளங்கள் உண்டு. இதற்கே தேசயாத்திரை கண்டனர். பொருனையில் செம்புண்டென்ப. மருந்தின்றி உடல் வன்மை பெறவே கோயில் வணக்கம் கண்டனர். கடவுள் வழிபாடு தூய்மைக்கேயாம்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத் தொடங்கினவர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே!"

என்றார் தாயுமானார். நன்னீராடி, நற்காற்றில் மூழ்கி, பரந்த பெரு வெளியில் உலாவியும் மலைகள் மேலேறியும் ஆலயங்களை வலம் வருதல் சிறந்த உடற்பயிற்சியாகும். ஞாயிறு வணக்கத்தால் உடல் வலிமைபெறும்; காலைக்கதிரவன் ஒளி கண்ணொளி காத்து வளர்க்கும். கோயில் சுற்றுதல் நரம்புகள் நல்லுரம் பெறச் செய்யும். மகான்கள் மனம் வாக்குக்காயத்தால் வழிபாடு செய்யக் காரணமானவைத் திருக்கோயில்கள் எனலாம். சமுதாயத்தின் நன்மைக்கும், சமூகக் கல்விக்கும், பொருளாதாரத்திற்கும், செல்வம் யாவரும் பெறுதற்கும், நல்வாழ்வு பெறுதற்கும் கால்கோட் செய்தல் கோயில்கள்.

பூகோளமும் சரித்திரமும் வாசிப்போர்க்குத் தேசப் படங்கள் எத்துணை அவசியமோ அத்துணை அவசியம் அன்பர்க்கு ஆலயங்கள். வானநூல் படத்திற் படித்துக் கண்ணுக் கெட்டா விண்மீன்களைப் பற்றித் தெரிகின்றோம். இப்படங்கள் உண்மையானவைகளின் பருத்த உருவமல்ல. ஆனால் அவைகளை விளக்கும் சிறிய உருவங்கள். கற்பனையாகவும் இருக்கலாம். வானநூல் வல்லுநர் யாவரும் வானத்திற் சென்று திரும்புகின்றாரில்லை. கோயில் வழிபாடும் அத்தகையதே. சிற்றறிவைக் கொண்டு ஒரு சிறிது பரம் பொருளைப்பற்றி அறிய அடிகோலுவதே தேவாலயம்.

கோயிலும் வழிபாடும்

வித்துவான், பண்டித, ரா. நடேச நாயகர்

மக்கட்பண்பு:—மனிதருள் மாக்கள் நிலையிலிருந்து மக்கள் நிலைமை யடைந்தவரே, உயர்ந்த பண்பாட்டை அல்லது நீப பகுத்தறிவை யடைந்தவர் எனப்படுவர். பண்புடைய மாந்தரே குணநலன்களை யெல்லாம் உடையவர். உலகத்தில் வாழ்வாங்கு வாழ்வதும் ஒரு குணநலன். பிற உயிர்களுக்குத் தன்னால் யாதொரு தீமையும் நேரிடாதபடியும், தான் பிறரிடத்தில் என்றும் மாசற்ற அன்புடனும் ஒழுகுவதும் மற்றொரு குணநலன். உலகப் பொருள்கள் அல்லது அவற்றை யியற்கை யென்று கூறினும் அத்தகைய பொருள்களாகிய காரியங்களுக்கு ஒரு காரணப் பொருள் உண்டு என்பதனை யறிவதும் வேறொரு குணநலன். இவ்வாறே, உலகிலுள்ள நல்ல செயல்களனைத்தும் சீரிய குண நலன்களுள் அடங்கும். உலகப் பொருள்களாகிய காரியங்களுக்குக் காரணமாயுள்ளது ஓராற்றல். அவ்வாற்றல் பருப்பொருளா யன்றி நுண் பொருளாயிருப்பதனால் அதனைக் காண முடியாது. அதனை அனுமான அளவையின் வாயிலாக மனத்தான் யோசித்துத்தான் உணரமுடியும். அவ்வாற்றல், எங்கும் என்றும் ஒரே நியதியாக இயங்குகின்றது. அவ்வியக்கம், அணு முதலிய சிறிய பொருள்களிலிருந்து மிகப்பெரிய எல்லாப் பொருள்களிடத்தும்—என்? அண்டங்களெங்கும்—இயங்குகிறது. அவ்வாற்றலை எங்கும் இயக்குவதற்குக் காரணமாயுள்ள ஒரு பொருளையே இறைவன் என்கின்றோம். அவ்விறைவனின் ஆற்றலை யுணர்ந்து உலகின் வாழ்வாங்கு வாழ்வதும் சிறந்த மக்கட் பண்புகளுள் ஒன்றாகும்.

இறை வழிபாடு:—மக்கள் நல்லன செய்யின் நல்ல பயன்களை யடைகின்றனர். அவர்கள் தீயன செய்யின் தீய பயன்களை அடைகின்றனர். இவ்விரண்டின் பயனும் சில சமயங்களில்

உடனே நிகழாவிட்டாலும் இறுதியில் அவை வந்தே தீருதலைக் காட்சி அளவையால் நாம் உலகில் காண்கிறோம். இவ்வாறு அடைதல் இயற்கையின் கட்டளை. அவ்வியற்கையை இயக்கும் இறைவனை நாம் என்றும் மனத்தில் நினைத்தல் வேண்டும். அவ்வாறு நினைப்பதனால் மறத்தை நீக்கி அறத்தையே புரிய எண்ணம் நிகழ்கிறது. சில மக்கள் சீரிய ஒழுக்கம் உள்ளவர்களாய் முதலில் திகழினும், செல்வம் செல்வாக்கு முதலிய ஆற்றல்கள் நேரிடும் போதெல்லாம் அவர்தம் மனம் மாறுபட்டு மறத்தைப்புரிதலும் உண்டு. அச்சமயத்தில் இறைவனின் ஆற்றலை அவர்கள் நினைக்கும்போது அது அவர்தம் மறத்தை நீக்க வழியாக இருக்கின்றது. ஒருவன் இறைவனின் பேராற்றலைநினைக்கும் போதெல்லாம், அழியும் பொருள்களின் நிலையும், அழியாப் பொருள்களின் நிலையும் தெளிவாக விளங்குகின்றன. இவற்றின் காரணமாக ஒருவன், இன்ப வாழ்க்கையில் இன்பமாக இருத்தலேயன்றி துன்ப வாழ்க்கையிலும் இன்பத்தையே காண்பான். ஏன்? இன்ப துன்பங்களை ஒரு பொருளாக மதியாது, அவன் மனம் என்றும் பற்றற்று இன்பமாகவே திகழும். இன்றும், இறைவனின் வழிபாட்டால் ஒருவனுக்கு உண்டாகும் நன்மைகள் பலப்பல.

இறை வழிபாட்டிற்கு உரிய இடம் :—இறைவனின் ஆற்றல் எங்கும் திகழ்தலை முன்னரே அறிந்தோம். இக்கருத்தை விளக்கவே நம் முன்னோரும் எள்ளுக்குள் எண்ணெய் போலவும், மலருக்குள் மணத்தைப்போலவும், பாலில் நெய்யைப் போலவும், மணியில் ஒளியைப் போலவும், விறகில் தீயைப் போலவும் இறைவன் எங்கும் பரந்துள்ளான் என்று பல உண்மைகளைக் காட்டிச் சென்றனர். அவ்வாறு ஐம்பூதத்தில் எங்கும் பரந்துள்ள இறைவன் நம்முடம்பிலும், நாம் உள்ள இடங்கள் தோறும் தங்கியுள்ளான். அவ்விறைவனை எளிதில் அறியும் ஆற்றல் நமக்கு இருப்பின் நாம் எங்கிருந்தேனும் அவனை வணங்கலாம். அத்தகைய ஆற்றல் நமக்கில்லை. இருப்பினும், சுற்றுச்சுழலின் தொல்லைகள் நம் மனத்தைக் கலைக்கும். அத் தொல்லைகள் ஏற்படாதவா

இறைவனை வழிபடவே நம் முன்னோர் கோயில்களைக் கண்டனர். கோயில்களில் சிலையாகிய யாதொரு குறியுமின்றி வணங்கலாமே என்னும் கேள்வியைச் சிலர் கேட்கலாம். அவ்வாறு சிலை இன்றி வணங்கின் மனம் பல்வேறு இடங்களில் ஓடிக்கொண்டே இருக்கும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மனத்தை வைத்துத் தியானம் புரியும்போதுதான் மனம் வேறு இடங்களில் செல்லாமல் நம் வயப்பட்டு வருதலை அனுபவத்தின் வாயிலாக அறிகிறோம். எங்கும் நிறைந்துள்ள இறைவனின் ஆற்றல் நாம் குறிப்பிட்டு வணங்கும் சிலையிலும் இருக்கின்றது. சிலையைக் குறித்துப் பழக்கப்பட்ட பக்குவமான மனத்திற்கு எங்கும் நிறைந்துள்ள இறைவனை அறியும் ஆற்றல் எளிதில் புலப்படும்.

இவ்வாறு பக்குவமாக மனத்தைப் பழக்கும் நிலையை வைணவ சிந்தாந்தத்தில் ஐவகை நிலையாகக் கண்டனர். அவற்றுள் நான்காவது நிலையைச் சிலையை வணங்குதலாகிய ‘அர்ச்சை’ என்பர். ஐந்தாவது நிலையை, எங்கும் பரந்துள்ளதை அறிதலாகிய ‘அந்தர்யாமித்வம்’ என்பர். எனவே, நம் முன்னோர்களும், எங்கும் பரந்துள்ள தன்மையாகவே கண்டு வணங்கினர். இவ் வணக்கம் பக்குவமாக மக்களுக்கு அமைவதற்காகவே சைவ சிந்தாந்தத்தில் அதனை நான்கு வகையாகக் கண்டனர். கோயிலுக்குச் செல்லுதல், பூசை புரிதல் முதலியவற்றை முதற்படியாகிய சரியை என்பர். குறிப்பிட்ட சிலையிடம் நாமே மலரிட்டுப் பூசை புரிதலை இரண்டாவது படியாகிய கிரியை என்பர். இப் பழக்கத்தினுல் மனம் மாசற்றுத் தியானம் புரிதலை மூன்ருவது படியாகிய யோகம் என்பர். இவற்றின் காரணமாகப் புறவிடயங்களை மறந்து நமது ஆன்மா இறைவனுடன் ஒன்றுபட்டு பேரின்பமாகத் திகழும் நிலையை நான்காவது படியாகிய போதம் (ஞானம்) என்பர். இக்கருத்தைத் திருக்குற்ருலத் தல புராண ஆசிரியர்,

தரையின் ஆலயம் வலமுதல திருப்பணி சரியை
கிரிசன் எம்பிரான் அருச்சனை புரிவது கிரியை
ஒருமை யுள்ளுறத் தியானமுற் றிருப்பது யோகம்
பொருவி வானுடன் இரண்டறக் கலப்பது போதம்

என்று விளக்கிக் காட்டினுர்.

எனவே, மாசற்றுப் பக்குவமான மனம், சரியை, கிரியை யாகிய இரண்டு நிலைகளைக் கடந்தபின், யோக நிலையிலோ ஞான நிலையிலோ அமர்ந்து எவ்விடத்திருந்தும் இறைவனைக் காணலாம் எனினும் இவ்விரண்டு நிலைகள் உண்டாவதற்கு முன்னர் நமது இறை வணக்கம் புரியக் கோயிலும் சிலையும் இன்றியமையாதன வாய் இருக்கின்றன.

கோயில் அமைதி: இறைவனைத் தூய மனத்துடன் வணங்க நம் முன்னோர்கள் பற்பல கோயில்களைக் கண்டனர். கோயிலில் இன வேறுபாடு குல வேறுபாடு முதலிய பல வேறு பாடுகளுக்கு இடமில்லை. மன அமைதிக்காகத் தியானம் புரியவே பரந்த வெளியிடங்களை அமைத்தனர். சுகாதாரத்திற்காகக் குளங் களையும், பல மூலிகைத் தருக்களையும், சிறந்த பூங்காவனங் களையும் அமைத்தனர். கல்வி, மருத்துவம் முதலியன தருமத்திற்கு வழங்கச் சிற்சில பெரிய கோயில்களில் தமிழ் வேந்தர்கள் கட்டளை யிட்டிருந்தனர். இவ்வாறே சுகாதார நிலையை யொட்டியும் மன அமைதியை யொட்டியும் பற்பல கோயில்கள் எழுந்தன. எனவே இம்மை மறுமைக்குரிய நலன்களைப் பெறவே கோயில்கள் அமைந் துள்ளன. இத்தகைய கோயில்களுள் ஒருசில இக் காலத்தில் பல வேறு காரணங்களால் வேறுபட்டிருப்பதும் உண்மையே. ஒருவ னுக்குப் பிணி நேரிடுமாயின் அதனை மருந்தருந்தித் தீர்த்துக் கொள்ளுவானே தவிர அவனுடைய உடலைச் சிதைத்து விடமாட் டான். அதுபோலவே, ஒரு சிலரின் செல்வாக்காலும், காலப் போக்காலும், தக்க ஆதரவு இன்மையாலும் சிற்சில கோயில்கள் நிலைகெட்டிருப்பினும் அவற்றை நன்னிலைப்படுத்தி அவற்றின் பயனைத் துய்ப்பதும் நமது கடமையாகும்.

Printed at the V. R. Press, Madras—12.